மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 5 • இதழ் 9 • பிப்ரவரி 2021 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்



## வரம்
சிறப்பிதழ்


RAMRAJ
COTTON
RAMRAJ
ANTI-VIRAL
DHOTIS • SHIRTS
HealthGuard®
99.94%* EFFECTIVE AGAINST VIRUS
Brought to you in India by Britacel
*HealthGuard is effective when applied as directed tested strain: H1N1, as per ISO 18184


மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்
வரமாகக் கிடைத்த இந்த வாழ்வை
குடும்பம், நட்பு, சமூகம் என எல்லா
இடங்களிலும் உணர்ந்து இனிதே
வாழ்வதற்கு வழிகாட்டும்
வரம்
சிறப்பிதழ்
என்ற இந்த இனிய நூலை
வழங்குவதில் பெருமிதம்
கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் சங்க கால தமிழ்ப் புலவர் சொன்ன வாழ்வியல் உண்மை. 'நல்லதும் கெட்டதும் நம்ம கையில இருக்கு' என்று கிராமத்துப் பெரியவர்கள் சாதாரணமாக இப்போதும் சொல்வார்கள். நன்மையும் தீமையும் நமக்குப் பிறரிடம் இருந்து வருவதைவிட, நம்மிடமிருந்து வருவதே அதிகம். எந்த ஒரு விஷயமும் நமக்கு வரமாகவும் முடியும்; சாபமாகவும் முடியும்.

வரம் கொடுத்தவர் தலையிலேயே கைவைக்க முயன்ற கதையை நாம் அறிந்திருக்கிறோம். பஸ்மாசுரன் என்ற அசுரன் சிவபெருமானை நோக்கி தவம் இருந்தான். 'நான் யார் தலையில் கை வைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாக வேண்டும்' என்று வரம் கேட்டான். இறைவனும் அவன் கேட்ட வரத்தை வழங்கினார். வரத்தின் வலிமையை சோதித்துப் பார்க்க, சிவபெருமான் தலையிலேயே கைவைக்க முயன்றான் பஸ்மாசுரன். சிவபெருமானும் விஷ்ணு பகவானும் நாடகமாடி, பஸ்மாசுரனை அவன் தலையிலேயே கைவைத்து பஸ்பமாகச் செய்தனர்.

எந்த விஷயத்தையும் சரியாகப் பயன்படுத்தினால் வரம்; தவறாகப் பயன்படுத்தினால் சாபம். சரியாகப் பயன்படுத்தினால் விஷம்கூட உயிர்காக்கும் மருந்தாவதை அறிவியல் நிரூபித்து இருக்கிறது. முறையாகப் பயன்படுத்தவில்லை என்றால், பல ஆய்வுகளுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகூட உயிர் பறிக்கும் என்பது நாம் அறிந்த உண்மை.

மிக்ஸி, கிரைண்டர், வாஷிங் மெஷின் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கினால் நேரம் மிச்சமாகும் என்று நம்பியே வாங்குகிறோம். அந்த 'மிச்சம் ஆகிற' நேரத்தை நாம் என்ன செய்கிறோம்? இதில்தான் அந்தப் பொருள் நமக்கு நன்மை செய்யப்போகிறதா, தீமை செய்யப்போகிறதா என்பது முடிவாகும். அந்த நேரத்தில், ஒன்றுக்கும் உதவாத விஷயங்களை டி.வியில் பார்த்துக் கொண்டிருந்தால், நம் உடல் உழைப்பும் குறைந்து, ஆரோக்கியக் குறைவே ஏற்படும்.

பைக் வாங்கினால் 'விரைவாக ஒரு இடத்தை அடைந்துவிடலாம்' என்று வாங்குவோம். விரைந்து சென்று நம்முடைய பணிகளை மேலும் சிறப்பாக செய்தால் மட்டுமே அந்தப் பொருள் நமக்கு நன்மை தருவதாக அர்த்தம். சைக்கிள் மிதித்து, நடந்து சென்று ஒரு வேலையை செய்வதில் உடல்நலம் பெறமுடியும். அதையும் தவிர்த்து, முதலீடு செய்து ஒரு பொருளையும் வாங்கி, பயனற்ற காரியங்களைச் செய்து கொண்டிருந்தால் நேரத்தைவிட தீமை மட்டுமே நமக்கு மிச்சமாகும். இன்றைய காலகட்டத்தில் நம்மை மேம்படுத்திக் கொள்ள பல வாய்ப்புகள் இருந்தும், அவற்றைத் தவறாகவே பயன்படுத்துகிறார்கள் பலர்.

இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் நாம் உலகின் எந்த மூலையில் இருப்பவரையும் சில நொடிகளில் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால், ஒருமித்த உணர்வுடன் இணைந்திருக்கிறோமா என்பதே முக்கியமான கேள்வி.

சுவாமி விவேகானந்தர் வாழ்வில் நடந்த சம்பவம் இது. ''நாம் அனைவரும் தொடர்பில் இருப்பதைவிட இதயத்தால் இணைந்திருப்பது அவசியம்'' என்று ஒரு கூட்டத்தில் அவர் பேசினார். ''நீங்கள் பேசுவது புரியவில்லை'' என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் தெரிவித்தார். ''தொடர்பில் இருப்பதும், இணைந்திருப்பதும் ஒன்றுதானே? இதில் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டார். ''நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?'' என்று விவேகானந்தர் அவரிடம் கேட்டார். ''பத்திரிகை நிருபராக பணிபுரிகிறேன்'' என்றார் அவர். ''நீங்கள் குடும்பத்துடன் வசிக்கிறீர்களா?'' என்று கேட்டதற்கு, ''வேலை நிமித்தமாக வெளியூரில் தனியாகத் தங்கி இருக்கிறேன்'' என்று பதில் கூறினார் அந்த நிருபர்.

''உங்கள் உடன்பிறந்தவர்கள், பெற்றோர் எங்கே இருக்கிறார்கள்?'' என்ற கேள்விக்கு, ''எல்லோரும் 200 கி.மீ தொலைவில் உள்ள ஊரில் வசிக்கிறார்கள்'' என்று பதில் அளித்தார். ''நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் அடிக்கடி பேசுகிறீர்களா?'' என்று கேட்க, அவர் ''ஆம்'' என்று தலையசைத்தார். ''நீங்கள் சமீபமாக உங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து எத்தனை நாட்கள் இருந்தீர்கள்?'' என்றதும், ''கடந்த மாதம் ஒரு வாரம் வீட்டில் தங்கி இருந்தேன்'' என்று பதில் அளித்தார்.

''அந்த நாட்களில் உங்களுடைய பெற்றோர் அருகில் அமர்ந்து, அவர்களோடு எவ்வளவு நேரம் பேசினீர்கள். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா என்பதை உறுதி செய்தீர்களா?'' என்று விவேகானந்தர் புன்னகையுடன் கேட்டபோது அவரால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அந்த நிருபரின் கண்களில் நீர் வழிந்தது. ''நான் ஊருக்குப் போனாலும், என் வேலை பற்றியே சிந்திப்பேன். பெற்றோருக்கு பணம் அனுப்பினால் போதும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பணம்



மகிழ்ச்சியை அளித்துவிடும் என்று நம்பினேன். ஆனால், அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்பதை ஒருபோதும் உறுதி செய்யவில்லை. அவர்களுடன் அமர்ந்து உரையாடுவது மிகவும் குறைவு. அப்படியே பேசினாலும் என் தேவைகள், பிரச்னைகள் பற்றியே அதிகம் பேசி இருக்கிறேன்'' என்று பதில் சொன்னார் அவர்.

''நீங்கள் மட்டும் இல்லை. பெரும்பாலானவர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். உங்கள் குடும்பத்தினருடன் ஒன்றாய் அமர்ந்து உணவு அருந்துவதை வழக்கமாகக் கொண்டவர்கள் கை உயர்த்துங்கள்'' என்று விவேகானந்தர் கேட்க, கூட்டத்தில் சிலர் மட்டுமே கைதூக்கினர். பெரும்பாலானவர்கள் அமைதியாகத் தலை கவிழ்ந்தனர். ''நம்மில் பலர் குடும்பத்தினருடன், உலகத்துடன் தொடர்பில் இருக்கிறோம். இணைப்பில் இல்லை. இணைப்பு என்பது இதயத்துக்கும் இதயத்துக்கும் இடையே இருப்பது. ஒருவர்மீது ஒருவர் அக்கறை கொண்டு, அன்பு செலுத்துவதே இணைந்திருப்பது'' என்று விளக்கினார் விவேகானந்தர்.

சமூக வலைதளங்களில் நமக்கு அறிமுகம் இல்லாத பலருடன் இணைந்திருக்கிறோம். பெரும்பாலான பதிவுகள் அன்பை வெளிப்படுத்துவதைவிட, வெறுப்பையே வெளிபடுத்துகின்றன. உறவுகளை மேம்படுத்தப் பயன்படவேண்டிய புதிய தொழில்நுட்பங்கள் பலவற்றை, நம் உறவுகளை முன்பைவிட சிக்கலாக மாற்றுவதற்கே பயன்படுத்துகிறோம். தேவை அறிந்து பயன்படுத்தினால் அனைத்துமே நமக்கு வரம்தான். பொருட்கள் நம்மை இணைப்பதில்லை. அன்பே நம்மை இணைத்து வைத்திருக்கிறது. இயங்க வைக்கிறது. அதை என்றும் மனதில் மந்திரம் போல உச்சரிப்போம்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் - ராம்ராஜ் காட்டன்**

# வாழ்க்கையே ஒரு வரம்!



வரம் என்பது தவத்துக்குக் கிடைக்கிற பயன். இப்படித்தான் புராணக் கதைகள் நமக்குச் சொல்கின்றன. தவம் என்றால் முனிவர்களைப் போலவும், யோகிகளைப் போலவும் தன்னை வருத்திக்கொண்டு நீண்ட காலம் செய்வது மட்டுமல்ல! ஒரு விஷயத்தில் மனதை முழுமையாகச் செலுத்தி, அதை அடைவதற்காக செய்கிற முயற்சியும், அதில் காட்டுகிற ஈடுபாடும் தவம் என்றே கருதப்படும். எது வேண்டுமோ அதைப் பெறுவதற்கு எண்ணுகிற எண்ணமும், செயலும்கூட ஒருவகையில் தவம்தான்.

நல்ல வாழ்க்கையைப் போன்ற வரம் எதுவும் இருக்க முடியாது. அறமே அதைத் தருகிறது. அறம் என்பது தர்மம் செய்வது மட்டுமல்ல, நாம் செய்ய வேண்டிய எண்ணற்ற நல்ல செயல்களையும் 'அறம்' என்றே சொல்லலாம். மானிடப் பிறவி எடுப்பதே மிகச் சிறந்த வரம். நல்ல உடல்நலம், நிறைந்த அறிவுவளம், ஆரோக்கியமான மனம், மகிழ்ச்சியான குடும்பம்... இந்த எல்லாமே அமையப்பெற்று இனிமையாக வாழ முடிந்தால், அதுவே சொர்க்கம். முன் ஜென்மங்களில் செய்த நற்செயல்களின் விளைவாகவே மானிடப் பிறவி வாய்ப்பதாக முன்னோர்கள் சொல்வதுண்டு. அந்தப் பிறவியில் நாம் எடுக்கும் முடிவுகளே, வாழ்வை வரமாகவோ, சாபமாகவோ மாற்றுகிறது. சில சமயங்களில் நம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழல்களும் நம்மை இந்த இரண்டில் ஏதோ ஒன்றை நோக்கித் தள்ளும்.

திருவிழாக் கால ரோலர் கோஸ்டரில் ஏறி இறங்குவது போல, வாழ்விலும் ஏற்ற இறக்கங்கள் நிகழும். எதிர்பாராத பல திருப்பங்கள் நிறைந்ததே வாழ்க்கை. அதில் இனிமையான அனுபவங்களும் கிடைக்கும்; கசப்பான பாடங்களும் கிடைக்கும். எதை எப்படி எடுத்துக்கொண்டு முன்னேறுகிறோம் என்பதைப் பொறுத்தே நம் வாழ்வு அமைகிறது. ஒவ்வொரு கட்டத்திலும், புதுப்புது தருணங்களிலும், வெவ்வேறு சூழல்களிலும், வாழ்க்கையின் புது அர்த்தங்களை நாம் தரிசிப்போம்.

மனதுக்குள் சில கேள்விகள் கேட்டு, நம்மையே நாம் அறிந்துகொண்டால் நம்பிக்கையுடன் வாழ முடியும். அந்தக் கேள்விகள் இதோ:

**எனக்கு எது சிறப்பாக வரும்?**

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு நம் திறமைகளைப் பட்டியல் போட வேண்டும். இந்தத் திறமைகள் நமக்குக் கிடைத்ததில் நிறைவு வரும்; இவற்றை அளித்தவர்கள்மீது



நன்றி பெருகும். வாழ்க்கையில் சாதித்தவை குறித்து பெருமிதம் அடைவோம். எதிர்காலத்தையும் திட்டமிடுவோம்.

### இந்த வயதில் எது சரி?

வயது ஏறுவது என்பது பதற்றம் அடையவேண்டிய விஷயம் அல்ல! வயது அதிகமாகும்போது, நாம் பக்குவம் பெறுகிறோம். ஒவ்வொரு நாளும் கிடைக்கும் அனுபவங்கள், நம்மை நேற்றைவிட சிறந்த மனிதராக இன்று மாற்றுகின்றன. அறிவை செழுமைப்படுத்துகின்றன. இந்த வயதில் எதை நாம் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று முடிவெடுக்க உதவுகின்றன.



### என்னை சிரிக்க வைக்கும் விஷயம் எது?

எப்படிப்பட்ட நெருக்கடியான தருணத்திலும் ஒருவரால் சிரிக்க முடிகிறது என்றால், அவர் அதிர்ஷ்டசாலி. 'இந்தக் கசப்பான அனுபவங்களோ, மோசமான சம்பவங்களோ என்னை எதுவும் செய்யாது. நினைத்து நினைத்து சிரிக்கும் அளவுக்கு மகிழ்ச்சியான பல விஷயங்கள் என் வாழ்வில் நடந்திருக்கின்றன. அவற்றை நினைத்துச் சிரிப்பேன்' என முடிவெடுக்க முடிந்தால், நீங்கள் வரமான வாழ்வு வாழ்கிறீர்கள்.



### தவிர்க்க முடியாத மனிதர்கள் யார் யார்?

இந்தக் கேள்வியைக் கேட்டதும், குடும்பத்தினர், நண்பர்கள் என சிலரின் முகம் நினைவுக்கு வரும். 'இவர்களால்தான் என் வாழ்க்கை முழுமை அடைந்தது' என்று தோன்றும். அவர்களை எவ்வளவு நேசிக்கிறோம் என்பது புரியும். அவர்களுடன் மகிழ்ச்சியாகக் கழித்த நாட்களை நினைப்பீர்கள். வாழ்க்கை என்ற பரிசை நன்றியுடன் நினைக்க உதவும் கேள்வி இது.




### நம்மிடம் இருந்த மிகச்சிறந்த பொருட்கள் எவை?

குழந்தையாக இருந்தபோது விளையாடிய பொம்மை, பள்ளிக்காலத்தில் எடுத்துச் சென்ற புத்தகப்பை, கல்லூரி நாட்களில் வைத்திருந்த வாகனம் என பெரிய பட்டியலே நினைவுக்கு வரும். அவை எல்லாவற்றுக்கும் உங்கள் இதயத்தில் இடம் உண்டு. அவற்றுக்காக இந்த வாழ்க்கைக்கு நன்றி சொல்வீர்கள்.



### முன்பைவிட இப்போது நாம் எப்படி சிறப்பாக இருக்கிறோம்?



கடந்த காலங்களோடு ஒப்பிடும்போது இப்போது வாழ்க்கை மேம்பட்டு இருக்கிறது. தன்னம்பிக்கையுடன் இந்த வாழ்க்கையை அணுகி, வலிமையுடன் செய்த முயற்சிகளால்தான் இது சாத்தியமாகி இருக்கிறது. இந்த அழகிய வாழ்க்கைப் பரிசுக்காக நன்றி சொல்லுங்கள்.

### வாழ்க்கையில் மறக்க முடியாத தருணங்கள் எவை?

குடும்பத்துடன் சென்ற சுற்றுலா, நண்பர்களுடன் உரையாடிய நாட்கள், தேர்வில் வெற்றி பெற்ற நாள், வேலையில் சேர்ந்த நாள் இப்படி ஒவ்வொருவருக்கும் பல இனிமையான தருணங்கள் நினைவுக்கு வரும். அன்பு காட்டவும், நம் உயர்வில் பெருமிதப்படவும் நிறைய பேர் கூட இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை இது கொடுக்கும்.



### நினைத்ததைவிட சிறப்பாக நடந்தது எது?

சில விஷயங்களை 'இப்படித்தான் நடக்கும்' என எதிர்பார்ப்போம். ஆனால், நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறந்ததாக அது கிடைக்கும். அப்போது கிடைக்கும் மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அந்த நாட்களை நினைவுபடுத்தும்போது, ஆசிர்வதிக்கப்பட்டவராக ஒவ்வொருவரும் உணர முடியும்.



### கிடைத்த மிகச் சிறந்த பாராட்டு எது?

மனிதமனம் பாராட்டுகளுக்காக ஏங்குகிறது. அப்படி வாழ்க்கையில் கிடைத்த மிகச்சிறந்த பாராட்டுகளை நினைவுபடுத்திப் பாருங்கள். இன்னும் நிறைய பாராட்டுகளைப் பெற வேண்டும் என உற்சாகத்துடன் உங்களை அவை இயங்க வைக்கும்.



அன்பும் நன்றியுணர்வுமே ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் இனிமை ஆக்குபவை. எதிர்மறை எண்ணங்களையும், பாதுகாப்பற்ற உணர்வையும் அகற்றி, நம்மை முன்னேறச் செய்பவை. வாழ்வை வரமாக்கும் இந்த உணர்வுகளை உள்ளத்தில் எப்போதும் ஏந்துவோம். ●

# ஒவ்வொரு நாளும் ஒரு வரம்!

ஒரு புதிய நாளின் தொடக்கத்தில் நம் மனம் என்ன நினைக்கிறது என்பதைப் பொறுத்தே அந்த நாள் நமக்கு வரமாகவோ, சாபமாகவோ மாறுகிறது. விழித்து எழுந்ததும் மனதில் உற்சாகத்தை நிரப்பி, ‘இந்த நாளில் நான் நினைத்தது எல்லாம் நினைத்தபடி நடக்கும்’ என்று சொல்லிக்கொண்டால், உங்களால் நினைத்ததை சாதிக்க முடியும். அப்படி இல்லாமல், ‘ஏன்தான் விடிந்ததோ? இன்றும் இந்த நெரிசலில் நசுங்கி வேலைக்குப் போக வேண்டுமே’ என விரக்தி அடைந்தால், முன்னேற்றம் கிடைப்பதில்லை. நாம் நினைப்பதை செய்யும் வலிமை நமக்கு உண்டு. நல்லவிதமாக நினைத்து நம்பிக்கை பெற்று முன்னேற வேண்டும்.

தினமும் காலையில் எழுந்ததும் இதையெல்லாம் நினைத்துக்கொண்டால், வாழ்வில் உங்களைவிட வெற்றியாளர் யாருமில்லை!

- நான் இன்று வலிமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறேன்.
- இன்றைய சூரிய உதயம் எனக்குள் மிகுந்த தன்னம்பிக்கையை விதைத்துள்ளது.
- இது என்னுடைய நாள் என்பதால், நான் நினைத்த எல்லாமே நல்லவிதமாகவே நடக்கும்.
- இன்றைய தினத்தை மிகச் சிறந்ததாக மாற்றுவதற்குத் தேவையான எல்லாமே என்னிடம் இருக்கின்றன.
- இன்று சந்திக்கும் எந்த சவாலையும் சமாளிக்கும் தீர்வுகள் என்னிடம் உள்ளன.







- புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்கும் சமயோசித அறிவு எனக்கு உள்ளது.
- என்னுடைய ஆழ்மன உணர்வுகளைப் பயன்படுத்தி, சரியான முடிவுகளையே எடுப்பேன்.
- எனக்கு வாய்த்திருக்கும் எல்லாவற்றிலும் நிறைவடைந்து, இந்த வாழ்வை மிக மகிழ்ச்சியாக அனுபவிப்பேன்.
- கடந்த கால வலிகள் எதையும் இன்று நான் மனதில் சுமையாக வைத்திருக்கவில்லை.
- நான் என்னவாக இருக்கிறேனோ, அதில் முழு திருப்தி அடைந்திருக்கிறேன்.
- என்னை நான் ஆழமாகவும், எந்த நிபந்தனைகளும் இல்லாமலும் நேசிக்கிறேன்.
- நான் ஆசீர்வதிக்கப்பட்டதாக எப்போதும் உணர்கிறேன்.
- என் வாழ்வில் நடக்கும் எல்லா விஷயங்களும், என் நன்மைக்காகவே நடக்கின்றன என நம்புகிறேன்.
- எனது முயற்சியில் வெற்றி நிச்சயம் என்பதையும் உறுதியாக நம்புகிறேன்.
- என் கனவை நிறைவேற்ற என் முழு சக்தியையும் பயன்படுத்துவேன்.
- ஒவ்வொரு புதிய நாளிலும் என் வாழ்வில் அதிசயங்கள் நிகழும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.
- என் உறவுகளையும் நட்புகளையும் நேசிப்பேன்; என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியையே பரிசளிப்பேன்.
- என்னை நம்புகிறவர்களுக்கு வழிகாட்டும் ஒளியாக இருப்பேன்.
- இரும்புத்துண்டை காந்தம் கவர்வது போல, புதிய சிந்தனைகளை என் மனம் ஈர்த்துக்கொண்டே இருக்கும்.
- இன்று நான் எதைச் செய்தாலும், அதை அச்சமின்றி செயல்படுத்துவேன்.
- வெற்றி என்னைத் தேடிவரும்விதமாக என்னுடைய இன்றைய செயல்பாடுகள் இருக்கும்.
- நேற்று இருந்ததைவிட சிறிதளவேனும் மேலானவனாக இன்று நான் மாறியிருப்பதாக நினைக்கிறேன்.
- இன்று புதிதாக ஏதேனும் ஒரு விஷயத்தைக் கற்றுக்கொள்வேன்.
- யாரேனும் ஒருவருக்காவது இன்று ஏதாவது உதவிகள் செய்வதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.
- என்னுடைய சாதனைகளே எனது அடையாளம்; என் தவறுகள் என் அடையாளமாக அறியப்படுவதில் எனக்கு விருப்பமில்லை.
- இன்று எந்தத் தவறான முடிவுகளையும் எடுக்க மாட்டேன் என நம்புகிறேன்.
- அன்பு, கருணை, நம்பிக்கை ஆகியவற்றையே நான் மற்றவர்களுக்குக் கொடுப்பேன்; மற்றவர்களிடமிருந்தும் அவற்றையே பெறுவேன்.
- எந்தத் தோல்வியையும் என் இதயத்துக்குக் கொண்டு செல்லமாட்டேன்.
- இன்று எனக்கு இரு வாய்ப்புகள். எதிர்மறை எண்ணங்களையோ, நேர்மறை எண்ணங்களையோ சுமக்கலாம். நான் நேர்மறையாக இருக்கவே விரும்புகிறேன்.
- என் பொறுப்புகள் எதிலிருந்தும் நான் பின்வாங்க மாட்டேன்.
- இன்று என் மிகச்சிறந்த முயற்சிகளை எல்லா வேலைகளிலும் காட்டுவேன்.
- என் மனம் செய்ய நினைக்கும் எதையும் இன்று என்னால் சாதிக்க முடியும் என நம்புகிறேன்.
- நாளை பற்றிய கற்பனைகளில் நான் வாழ மாட்டேன். இன்று எனக்கு வாய்த்த வாழ்க்கையை முழுமையாக வாழ விரும்புகிறேன்.
- இன்று எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்னைகளையும், எனக்கான புதிய வாய்ப்புகளாகவே கருதுவேன்.
- ஒவ்வொரு போராட்டத்திலும் ஒரு புது அனுபவம் கிடைக்கிறது என நம்புகிறேன்.
- பொறுமை உணர்வுடனும், அச்சமில்லாமலும் எல்லா செயல்களையும் அணுகுவேன்.
- கெட்ட விஷயங்கள் நீண்ட நேரம் நிலைத்திருக்காது என்பதில் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளேன்.
- என்னை நான் மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என நம்புகிறேன்.
- நான் விரும்பும் வாழ்வை உருவாக்கிக்கொள்ளும் வல்லமையும் சுதந்திரமும் எனக்கு உள்ளது. ●

நீண்ட தூரத்திலிருந்து இரண்டு குடங்களில் தண்ணீர் எடுத்துவந்து, வீட்டின் கதவை லேசாகத் திறந்து உள்ளே வைத்துவிட்டு, இன்னும் இரண்டு குடம் தண்ணீர் கொண்டுவரச் சென்றுவிட்டார் மனைவி. அந்த நேரத்தில் கணவர் மதியம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருகிறார். கடும் வெயில். பசி கண்களை மறைத்திருக்கிறது. வெயிலில் வந்ததால் உள்ளே இருந்த குடங்களை கவனிக்காமல், அவற்றில் மோதி விழுந்துவிடுகிறார். இரண்டு குடங்களும் கவிழ்ந்து தண்ணீரும் கொட்டிவிடுகிறது. வீட்டிலிருந்த பல பொருட்கள் நனைந்துவிடுகின்றன.

அவருக்குக் கடுமையான கோபம் வருகிறது. இன்னும் இரண்டு குடங்களைத் தூக்கியபடி வெயிலில் களைப்புடன் வந்த மனைவியைத் திட்டுகிறார். ''இப்படியா வழியில் குடத்தை வைப்பது? உனக்கு மூளை இல்லையா?'' என அவர் கத்த, ''நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த தண்ணீரைக் கொண்டு வருகிறேன். உங்களுக்குக் கண் தெரியவில்லையா? ஏன் இப்படி தண்ணீரைக் கவிழ்த்தீர்கள்?'' என மனைவி கேட்க, வாக்குவாதம் பெரிதாகிறது. மனைவி கோபத்தில் தன் அம்மா வீட்டுக்குச் சென்றுவிடுகிறார்.

# வரமாக மாறும் திருமண வாழ்வு!



இன்னொரு வீட்டில் இந்தக் கதை இப்படி முடிந்தது. 'அடடா, மனைவி பாவம்! எவ்வளவு தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருகிறார்? நாம் கொட்டிவிட்டோமே! அவர் வந்தவுடன் மன்னிப்பு கேட்டுவிட்டு நாமே போய் இரண்டு குடம் தண்ணீர் எடுத்து வர வேண்டும்' என அவர் நினைக்கிறார்.

மனைவி தண்ணீரோடு வர, இவர் ஓடிப் போய் குடங்களை இறக்கியவாறு நடந்ததைச் சொல்கிறார். உடனே மனைவி பதறுகிறார். ''உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையே? தண்ணீர் போனால் போகட்டும். அங்கே தண்ணீரை வைத்தது என் தவறு. நான் போய் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் சாப்பிடுங்கள். பசியோடு வந்திருப்பீர்கள். பாவம்'' என்கிறார்.

கணவர் நெகிழ்ந்து போகிறார். மனைவி மீது இன்னும் அளவு கடந்த பாசம் உண்டாகிறது உள்ளுக்குள்.

இந்தப் புரிதலும் விட்டுக்கொடுத்தலுமே திருமண வாழ்வின் வரம். திருமண வாழ்வின் வெற்றி என்பது, தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கிறார்கள் என்பதில்தான் இருக்கிறது.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதும் உண்மை. இப்படி நிச்சயிக்கப்படும் திருமணங்கள் மூலம் சொர்க்கமே இந்த பூமிக்கு வருவதும் உண்மை. 'என் வாழ்க்கைத்துணை எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன். இவர் இப்படி இருக்கிறாரே' என ஏமாற்றம் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. 'நமக்குள் நிறைய குறைகளும் பலவீனங்களும் இருப்பது போலவே இவரிடம் இந்த மைனஸ் பாயின்ட்கள் உள்ளன' என்று புரிந்து ஏற்றுக்கொள்வதே மனநிம்மதிக்கான வழி.

திருமணத்துக்குப் பிறகு கணவன் மனைவிக்குள் எழும் நிபந்தனையற்ற அன்பே 'காதல்' எனப்படுகிறது. அதை மற்றவர்கள் புரிந்துகொள்வது கடினம். அது ஒருவர்மீது இன்னொருவருக்கு எழும் ஈர்ப்பு. 'நம் வாழ்க்கைத்துணையை உள்ளங்கையில் வைத்துத் தாங்க வேண்டும்' என்று எழும் உறுதி. 'இமைகளுக்குள் இருக்கும் கண் போல இவரைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்' என்று காட்டும் நம்பிக்கை. 'இவர் நம் பக்கத்தில் இருந்தாலே நமக்கு வலிமை கூடுகிறது' என்று தோன்றும் பலம். 'இவர் எதுவும் பேசாமல் அருகில் இருந்தால்கூட நமக்குள் மகிழ்ச்சி பொங்குகிறதே' என்று ஏற்படும் சந்தோஷம்.







இந்த ஈர்ப்பு, உறுதி, நம்பிக்கை, பலம், சந்தோஷம் எல்லாவற்றையும் வாழ்க்கை முழுக்க குறையாமல் வைத்திருப்பது திருமண உறவுதான்.

தன் தனிப்பட்ட விருப்பங்களை ஒதுக்கி வைத்து, தன் தேவைகளைப் புறக்கணித்து, ‘வாழ்க்கைத்துணையே முக்கியம்’ என்ற நினைப்பு எழுவதுதான் அன்பின் மகத்துவம். ‘மனைவி பேசுவதை கணவன் மதிக்க வேண்டும்’, ‘கணவன் பேசுவதை மனைவி கேட்க வேண்டும்’ என்பதையெல்லாம் தாண்டி, இருவரும் ஒரே குரலில் பேசுவதே அன்பின் நெருக்கத்தை உணர்த்துகிறது. தம்பதிக்கு இடையிலான அன்பு என்பது, தோட்டத்தில் ஓர் அழகிய பூ மலர்வதைப் போன்றது. அதை நீங்கள் தொட்டு உணராவிட்டாலும், அதன் இனிய நறுமணம் தோட்டம் முழுக்கப் பரவியிருக்கும். தினம் தினம் ஒரு புதிய பூ மலர்வதைப் போல அன்பு மலர்ந்துகொண்டே இருப்பதுதான் திருமணத்தின் வெற்றி.


வெவ்வேறு இடங்களில் பிறந்து, வித்தியாசமான சூழல்களில் வளர்ந்த இருவரையும் திருமணமே இணைத்திருக்கிறது. அதன்பின் அவர்களுக்குள் ஈர்ப்பு உருவாகிறது. அந்த ஈர்ப்பு அன்பாக உருமாறி, அவர்களை நிரந்தரமாகப் பிணைத்து வைக்கிறது. தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாக இது வளர்கிறது. திருமண வாழ்வில் தங்கள் எதிர்பார்ப்பு என்ன, இந்தப் புதிய உறவு குறித்த தங்கள் உணர்வு என்ன என்று இருவரும் மனம்திறக்கும்போது இது சாத்தியமாகிறது.

இருவரும் தனித்தனி மனிதர்கள் என்றாலும், மனதால் நெருங்கி வாழும்போது ஒன்றாக இணைந்துவிடுகிறார்கள். அன்பால் இணைந்து நீண்ட காலம் வாழும் தம்பதிகளைப் பார்த்தால் ஒரு விஷயம் புரியும். அவர்கள் பேசும் தொனி ஒரே மாதிரி இருக்கும். எந்த விஷயத்தைப் பற்றியும் ஒரே மாதிரி கருத்து சொல்வார்கள். கிட்டத்தட்ட அவர்கள் முகச்சாயல்கூட ஒரே மாதிரி ஆகிவிட்டது போலத் தோன்றும். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள வார்த்தைகள் தேவையில்லை. மற்றவர்கள் எதிரில் சாதாரணமாக கண்களாலேயே பேசிக்கொள்வார்கள். கணவர் கண் ஜாடை காட்டினாலே, அவர் என்ன எடுத்துவரச் சொல்கிறார் என மனைவிக்குப் புரியும்.

ஒரு குழு விளையாட்டில், வெற்றிக்கு அத்தனை பேரின் பங்களிப்புமே தேவைப்படும். திருமண வாழ்வின் வெற்றிக்கும் இருவரின் பங்களிப்பு அவசியம். ஒரு குழுவில் சிலர் சில விஷயங்களில் பலமாக இருப்பார்கள், சிலர் பலவீனமாக இருப்பார்கள். பலமாக இருப்பவர்கள் அதிகமாக உழைத்து, இன்னொருவரின் பலவீனத்தை ஈடு செய்வார்கள். தம்பதியருக்குள்ளும் இந்தப் புரிதல் வேண்டும்.

நம் வாகனம் தினம் தினம் இயங்க அதற்கு எரிபொருள் வேண்டும். அதை முறையாகப் பராமரிக்க வேண்டும். உயிரற்ற வாகனம்கூட, இந்த இரண்டும் இல்லாமல் இயங்காது. அப்படியானால், உயிருள்ள வாழ்க்கைத்துணைக்கு இன்னும் கூடுதலாக என்னவெல்லாம் வேண்டும் என நினைத்துப் பாருங்கள். அன்பு எனும் எரிபொருள் நிரப்பி, அக்கறை என்ற பராமரிப்பால் திருமண வாழ்வை வசந்தமாக மாற்றுங்கள். வற்றாத நீரூற்று போல குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். திருமண வாழ்வு அப்போதுதான் வரமாக மாறுகிறது. ●





# கண்ணுக்குத் தெரியாத வரங்கள்!

நாம் ஆயுள் முழுக்க நினைத்து நன்றி கூற வேண்டிய பல விஷயங்கள் நம் வாழ்வில் நிகழ்கின்றன. ஆனால், அவை எல்லாவற்றையும் நமக்கு இயல்பாகக் கிடைக்க வேண்டியவை என நினைக்கிறோம். அதனால் சாதாரணமாகக் கடந்துவிடுகிறோம்.

இளமையில் கல்வி நமக்குக் கிடைக்கிறது. 'எல்லோரும் கட்டாயமாகப் படிக்க வேண்டும்' என்று நம் நாட்டில் சட்டம் இருக்கிறது. எனவே, அது நமக்கு தானாகவே கிடைத்துவிடுவதாக நம்புகிறோம். கல்வியறிவு இல்லாதவர்களை சந்திக்கும்போதுதான் கல்வியின் அருமை நமக்குப் புரிகிறது. பல நாடுகளில் கிராமங்களில் பள்ளிகளே இருப்பதில்லை. எல்லா கிராமங்களிலும் பள்ளிகள் இருக்கும் அருமையான தேசத்தில் பிறந்தது வரம் என்பது அதைப் பார்க்கும்போது புரியும்.

நம் வளர்ச்சியில் அக்கறை காட்டும் நல்ல ஆசிரியர்கள் கிடைப்பது பெரிய வரம். நம்மை வாழ்வில் உயர்த்தும் ஏணியாக அறிவு புகட்டும் அந்த ஆசிரியர்களை பலரும் நன்றியுடன் நினைத்துப் பார்ப்பதில்லை. 'இது அவர்களின் வேலைதானே' என நினைத்துவிட்டால், நன்றி சொல்லத் தோன்றாது.

வளர வளர பல உண்மைகள் புரியும். தினமும் போர்களும் மோதல்களும் உலகின் பல நாடுகளில் நடக்கின்றன. இன்று தூங்கப் போனால், நிம்மதியாகத் தூங்கி நாளை காலை எழுந்திரிக்க முடியுமா என்பதே நிச்சயம் இல்லாத நரக வாழ்க்கை வாழ்கிறார்கள் மக்கள். அமைதிப் பூங்காவாகத் திகழும் ஒரு நாட்டில் வசிப்பது எவ்வளவு பெரிய வரம் என அதைப் பார்க்கும்போது புரியும்.

வாழ்வில் எளிய விஷயங்களாக, இயல்பான விஷயங்களாக நாம் நினைக்கும் பலவும் உண்மையில் மகத்தான வரங்கள். அப்படி நமக்குக் கிடைத்திருக்கும் சில வரங்கள்:

- பெற்றோர்களே நமக்கு முக்கியமான வரம். அவர்களின் அன்பும் அக்கறையும் இல்லாவிட்டால் நாம் முழுமை பெறுவதில்லை.
- குடும்பம் நமக்குக் கிடைத்த இன்னொரு வரம்.

உறவுகளின் அன்புச் சங்கிலியில் நம்மைப் பிணைத்து இந்த சமூகத்துக்குக் கொடுப்பது நம் குடும்பமே!

◆ நண்பர்கள் நமக்குக் கிடைத்த வரம். துன்பங்களில் தோள் கொடுத்து, மகிழ்ச்சியான தருணங்களில் அதைப் பகிர்ந்துகொண்டு, நம்மை வழிநடத்துகிறார்கள்.

◆ ஐம்புலன்களும் நல்ல திறனோடு இருப்பது நல்ல வரம். இந்த உலகத்தின் அழகைப் பார்க்கவும், இனிமையான இசையையும் வார்த்தைகளையும் கேட்கவும் முடிவது பெரும் பாக்கியம். தொடுதலை உணர்ந்து, அதில் இருக்கும் அன்பைப் புரிந்துகொள்ள முடிகிறது. வாசனைகளை உணர முடிகிறது. அறுசுவைகளையும் ருசிக்க முடிகிறது.

◆ பேச்சுத்திறன் நமக்குக் கிடைத்த வரம். அதுவே நம்மை உலகுக்கு அடையாளம் காட்டுகிறது. நம் வளர்ச்சிக்கு பாதை போடுகிறது.

◆ ஆரோக்கியமான இதயமும், நல்ல நோய் எதிர்ப்பு சக்தியும், எந்தக் குறைபாடுகளும் இல்லாத உடலும் உண்மையில் நமக்குக் கிடைத்த வரங்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மருத்துவமனைகளுக்குப் போகும்போதுதான் இதன் அருமை பலருக்குப் புரியும்.

◆ நற்சிந்தனைகளும், புதுமையான யோசனைகளும் உதிக்கும் மனம் ஒரு மகத்தான வரம். வாழ்வில் நாம் உயர்வதற்கு மனமே காரணமாக இருக்கும்.





◆ நல்ல பள்ளியில் படிப்பதும், தன்னலமற்ற ஆசிரியர்கள் அமைவதும் ஒவ்வொரு குழந்தைக்கும் வரம். வலுவான எதிர்காலத்துக்கான அஸ்திவாரம் அங்குதான் போடப்படுகிறது.

◆ புன்னகையும் ஒரு வரம். நம் மகிழ்ச்சியை சமூகத்துடன் பகிர்ந்துகொள்ள அது பாதை போடுகிறது. கண்ணீரும் ஒரு வரம். நம் உணர்வுகளை வெளிப்படுத்த அது உதவுகிறது.

◆ ஏமாற்றமும் ஒரு வரமே! நமக்கு எது வேண்டும், எதையெல்லாம் நாம் எதிர்பார்க்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள அது உதவுகிறது.

◆ பயமும் ஒரு வரம்தான். நாம் வளர்வதற்கான வாய்ப்புகளை பயமே உருவாக்கித் தருகிறது.

◆ நேர்மறையான மனதுடன் அணுகினால், வலியும் ஒரு வரமே! நம்மை வலிமையான மனிதராக மாற்றுவதற்கு வலியே உதவுகிறது.

◆ கோடையில் சூரியனை சபிக்கிறோம். ஆனால், அதுவே மனித இனத்துக்குப் பெரிய வரம். சூரிய வெளிச்சம் இல்லையென்றால், உயிர்கள் வாழ முடியாது. நிலவு வெளிச்சம் தராது.

◆ மழையும் நமக்கான வரம். நமக்குத் தேவையான உணவுகள் விளையவும், நாம் குடிக்கும் தண்ணீரைப் பெறவும் மழையே காரணம்.

◆ இயற்கையின் கருணையே நமக்குக் கிடைத்த முக்கியமான வரம். இந்த உலகத்தை நாம் வாழத் தகுந்த இதமான சூழலில் வைத்திருப்பது இயற்கைதான். சுவாசிக்க ஆக்சிஜன் கொடுத்து, நமக்குத் தேவையான எல்லா வளங்களையும் கொடுத்து, நம் வாழ்வு தழைக்கச் செய்கிறது இயற்கை.

◆ அறிவியலும் தொழில்நுட்பமும் நமக்குக் கிடைத்த இரட்டை வரங்கள். நம் வாழ்க்கையை எளிதாக்கும் பல கருவிகளை உருவாக்கிக் கொடுத்தது அறிவியல்தான். வசதியான வீடுகள், மின்சாரம், போக்குவரத்து என சகல வசதிகளையும் அது தந்தது. உலகம் முழுக்க இருக்கும் உறவுகளைத் தொடர்புகொள்ள போன், பொழுதுபோக்க தொலைக்காட்சி, வேலைகளைச் சுலபமாக்க கம்ப்யூட்டர் என எல்லாவற்றையும் தந்தது தொழில்நுட்பம்.

◆ புத்தகங்கள் நமக்குக் கிடைத்த முக்கியமான வரம். நம் முன்னோர்களின் அனுபவங்களும் வாழ்க்கை உண்மைகளும் அவற்றின் மூலமே நமக்குக் கிடைக்கின்றன.

◆ நேரம் நமக்குக் கிடைத்த வரம். நம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், நம் வாழ்வில் எது முக்கியம் என்பதைத் திட்டமிடவும் அதுவே நமக்கு உதவுகிறது.

◆ வேலை, தொழில், வியாபாரம் என ஒருவரின் வாழ்க்கை ஆதாரமாகவும் அடையாளமாகவும் எது இருக்கிறதோ, அதுதான் அவருக்குக் கிடைத்த மிக முக்கியமான வரம். ஒருவரின் வாழ்வுக்கு அதுவே மதிப்பு சேர்க்கிறது.

◆ உலகம் முழுக்க சுற்றினாலும், ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் இருக்கும் நேரத்திலேயே நிம்மதியாக உணர்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வைக் கொடுக்கும் வீடு, நிஜமான சொர்க்கம்.

◆ நண்பர்களும் வரம்; எதிரிகளும் வரம். நம் உண்மையான பலம் என்ன என்பதை நாம் உணர்ந்துகொள்ள, எதிரிகளே நமக்கு உதவுகிறார்கள்.

◆ வாழ்க்கைத்துணை ஒருவருக்கு பெரும் வரம். நம்மைப் புரிந்துகொண்டு நமக்கு எல்லாமுமாக இருக்கும் வாழ்க்கைத்துணை அமைவது இல்லறம் இனிக்க உதவும்.

◆ சவால்கள் நமக்கு வரம். நாம் வளர அவை உதவும். தவறுகளும் வரமே! நம்மை மெருகேற்றிக்கொண்டு ஜெயிக்க அவை உதவும். ●

# தந்தை என்கிற வரம்!



ஓர் இளைஞனுக்கு வீடு நரகமாக இருந்தது. அப்பா வில்லனாகத் தெரிந்தார். எல்லா நேரங்களிலும் அவர் போடும் கட்டளைகள் எதுவுமே அவனுக்குப் பிடிக்கவில்லை.

'ஃபேனை நிறுத்தாமல் வெளியே போகிறாயே?', 'யாருமே பார்க்காமல் டி.வி எதற்காக ஓடுகிறது. அதை நிறுத்து!' 'குளிப்பதற்கு ஏன் இவ்வளவு தண்ணீரை ஊற்றுகிறாய், கொஞ்சமாக எடுத்து குளிக்கத் தெரியாதா...' இப்படி சின்னச்சின்ன விஷயங்களுக்குக்கூட அப்பா எப்போதும் நச்சரிப்பது பிடிக்கவில்லை.

'இன்றுதான் அதற்கெல்லாம் விடிவுகாலம்' என அவன் நினைத்தான். ஒரு நிறுவனத்திலிருந்து அவனுக்கு வேலைக்கான இன்டர்வியூவுக்கு அழைப்பு வந்திருந்தது. அங்குதான் இப்போது போகிறான். 'வேலை கிடைத்தால், எங்காவது வெளியூர் கிளைக்குக் கேட்டு வாங்கிக்கொண்டு போய்விட வேண்டும். அப்பாவின் நச்சரிப்பிலிருந்து தப்பிக்கலாம்' என நினைத்துக்கொண்டான்.

இன்டர்வியூவுக்கு அழைக்கப்பட்டிருந்த முகவரிக்கு வந்து சேர்ந்தான். பிரமாண்டமாக இருந்த கட்டிடத்தின் மெயின் கேட்டில் செக்யூரிட்டி யாரும் இல்லை. கதவு சற்றே திறந்திருந்தாலும், அதன் தாழ்ப்பாள் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. உள்ளே நுழைபவர் கொஞ்சம் ஏமாந்தாலும், இடித்துக் காயமாக்கிவிடும். அதை சரி செய்து, கதவை சரியாக மூடிவிட்டு உள்ளே நுழைந்தான்.

நடைபாதையின் இருபுறமும் அழகு மலர்ச்செடிகள் வரவேற்றன. ஆனால், அவற்றுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக போட்டிருந்த குழாய், வீணாக நடைபாதையை நனைத்துக்கொண்டிருந்தது. குழாயைக் கையில் எடுத்தவன், செடிகளின் பக்கம் அதைத் திருப்பிப் போட்டுவிட்டுச் சென்றான்.

வரவேற்பறையில் யாரும் இல்லை. நேர்காணல் முதல் தளத்தில் நடைபெறுவதாக அறிவிப்புப் பலகை வைத்திருந்தார்கள். மாடிப்படிகளில் ஏறினான். நேற்று இரவில் போடப்பட்ட

விளக்கு காலை பத்து மணியாகியும் படிகளுக்கு மேலே எரிந்து கொண்டிருந்தது. 'விளக்கை அணைக்காமல் செல்கிறாயே?' என்ற அப்பாவின் கண்டிப்புக் குரல் காதுக்குள் ஒலிப்பதுபோல் தோன்ற, எரிச்சல் வந்தாலும் சுவிட்சைத் தேடி விளக்கை அணைத்தான்.

முதல் மாடியின் பெரிய ஹாலில், ஏராளமானவர்கள் காத்திருந்தார்கள். கூட்டத்தைப் பார்த்த இவனுக்கு ஒரே திகைப்பு. 'நமக்கு இங்கு வேலை கிடைக்குமா?' என்று படபடப்பு ஏற்பட்டது. பதற்றத்துடன் அறைக்குள் நுழைய காலடி வைத்தவன், மிதியடி தாறுமாறாக மடிந்து இருந்ததை கவனித்தான். 'யாராவது கால் தடுக்கி விழப் போகிறார்கள்' என அதைக் காலால் சரி செய்துவிட்டு உள்ளே நுழைந்தான். ஹாலின் ஒரு பக்கத்தில் எல்லோரும் அமர்ந்திருக்க, பின்பக்கத்தில் காலி நாற்காலிகளுக்கு மேலே பல மின்விசிறிகள் சும்மா சுற்றிக் கொண்டிருந்தன. 'யாருமே இல்லாமல் ஏன் அறையில் மின்விசிறி ஓடுகிறது' என்ற அப்பாவின் கேள்வி காதுக்குள் ஒலிக்க, அவற்றை நிறுத்திவிட்டு முன்னால் போய் அமர்ந்தான்.

சில நிமிடங்களில் இவனுக்கு அழைப்பு வந்தது. உள்ளே போனதும், ''நீங்கள் எப்போது வேலையில் சேர்கிறீர்கள்?'' என்று கேட்டார் நிர்வாகி. இவன் புரியாமல் குழம்பினான். ''ஒருவரின் செயல்பாடுகளை வைத்தே நாங்கள் ஊழியர்களைத் தேர்வு செய்கிறோம். கண்காணிப்பு கேமரா மூலம் கவனித்ததில், நீங்கள் ஒருவர்தான் எல்லாவற்றையும் கவனித்து சரி செய்தீர்கள். இப்படிப்பட்ட ஒழுங்கும் அக்கறையும் கொண்டவரே எங்களுக்கு வேண்டும். அதனால்தான் உங்களுக்கு வேலை'' என்றார் நிர்வாகி.

தன் எதிர்காலத்துக்கான பாதையை அப்பா செதுக்குகியிருக்கிறார் என்பதை உணர்ந்தவன், ''நாளையே என் அப்பாவோடு வந்து வேலையில் சேர்கிறேன்'' என்றான்.

**இ**து இன்னொரு இளைஞனின் கதை பெற்றோர் கஷ்டப்பட்டு வளர்த்து அவனை ஆளாக்கினார்கள். அவனும் பெற்றோரின் கஷ்டத்தை உணர்ந்து, சிறப்பாகப் படித்து, நல்ல வேலையில் சேர்ந்தான். தன் முதல் மாதச் சம்பளத்தை வாங்கி வந்து அம்மாவிடம் கொடுத்தான்.

''இத்தனை நாளும் உனக்கு எல்லா செலவையும் செய்தவர் அப்பா. அவரிடம் போய் சம்பளத்தைக் கொடு'' என்றார் அம்மா. அவனோ 'முடியாது' என்று மறுத்து விட்டான். அம்மா எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அம்மாவுக்குக் கோபம் வந்து அவனை அடித்துவிட்டார். ''பணத்தை அப்பாவிடம் கொடு. ஏன் இப்படி அடம் பிடிக்கிறாய்?'' என்றார் அம்மா.

அவனோ, ''அம்மா! ஒவ்வொரு முறையும் அப்பாவிடம் நான் பணம் வாங்கும்போது அவருடைய கை மேலே இருக்கும். என்னுடைய கை கீழே இருக்கும். ஆனால் இப்போது நான் என் சம்பளப் பணத்தைக் கொடுக்கும்போது அவருடைய கை கீழேயும், என்னுடைய கை மேலேயும் அல்லவா இருக்கும்! அது அப்பாவுக்கு மரியாதைக் குறைவு. அதை நான் செய்ய மாட்டேன்'' என்றான். அம்மா கண்ணீருடன் அவனை அரவணைத்தார்.

அப்பாவே அனைவரையும் விட, மிகச் சிறந்த நன்மைகளை நமக்குச் செய்யக் கூடியவர். நம்மை அரவணைத்துப் பாதுகாப்பவர். முகம் தெரியாத யார் யாருக்கோ மரியாதை செய்கிறோம். நம்மைக் கொஞ்சி வளர்த்த தந்தைக்கு அதைவிட அதிக மரியாதை செய்ய வேண்டும். அப்பாவுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில், குறை வைத்து விட வேண்டாம். தாய் தன் வயிற்றிலும் தோளிலும் சுமந்து ஒரு குழந்தையை வளர்க்கிறார். அப்பா மனதில் சுமந்து வளர்க்கிறார். 'நாம் பார்க்காத உலகத்தையும் நம் பிள்ளை பார்க்க வேண்டும்' என்று சிரமப்படுகிறார். தந்தையைப் போல் உண்மையான நண்பன் இந்த உலகத்தில் யாரும் இல்லை.

◆ அப்பா முன்பு குரலை உயர்த்தாதீர்கள். அவ்வாறு செய்தால் இறைவன் உங்களைத் தாழ்த்தி விடுவான்.

◆ அப்பாவின் கண்டிப்பை பொறுத்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.

◆ அப்பாவுக்கு மரியாதை செய்யுங்கள். உங்கள் பிள்ளைகளிடமிருந்து உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.


◆ அப்பா சொல்வதை கவனமாகக் கேளுங்கள். அப்போதுதான் யார் யாரோ நமக்கு அறிவுரை சொல்லும் நிலை வராது.

◆ அப்பாவின் முன்பு பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். மக்களின் பார்வையின் முன்பாக இறைவன் உங்களுக்கு உயர்ந்த கண்ணியம் அளிப்பான்.

◆ அப்பாவின் வாழ்க்கை அனுபவங்களே நமக்கு தெளிவான ஒரு புத்தகம். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பாடமாக எண்ணி பயன் அடையுங்கள்.


◆ தந்தையை மதித்தவர் கோபுரத்தின் மேல். தந்தையை மதிக்காதவர், வாழ்க்கையில் எந்த உயரத்திற்கும் செல்வது கடினமே! ●

# குறையே ஒரு வரம்!



இளமையில் கற்றல் குறைபாடு உள்ள மாணவனாக இருந்தார் வின்ஸ்டன் சர்ச்சில். பள்ளி நாட்களில் சுமாராகவே படிப்பார். அதற்காக ஆசிரியர்களிடம் அடி வாங்கியும் இருக்கிறார். பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும், 'சுமாரான மாணவன்' என்பதால் அவருக்கு ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் படிக்க இடம் கிடைக்கவில்லை.

ஆனால், ராணுவக் கல்லூரியில் இப்படியெல்லாம் பார்க்காமல் எல்லோரையும் சேர்த்துக்கொள்வார்கள். அதனால் அங்கு சர்ச்சிலை சேர்த்தார் அவரது அப்பா. சர்ச்சிலுக்கு படிப்பைத் தாண்டி போர்முறையிலும் பெரும் ஆர்வம் வந்தது. பின்னாட்களில் அரசியலுக்கு வந்து இங்கிலாந்தின் பிரதமராக ஆனார் சர்ச்சில். இளமையில் ராணுவக் கல்லூரியில் கற்றுக்கொண்ட போர்த் தந்திரங்கள் அவருக்கு உதவின. இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரை வீழ்த்தி உலகத்தைக் காப்பாற்ற அவரால் இதனால்தான் முடிந்தது. சுமாரான மாணவன் என்ற குறையே அவருக்கு வரமானது !



# அன்பு ஒரு வரம்!

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்த நேரம். அப்போது அதிபராக இருந்த ஆபிரஹாம் லிங்கன், போரில் காயமடைந்த வீரர்களை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் சொல்வதை வழக்கமாக வைத்திருந்தார். அப்படி ஒருமுறை போனபோது, கடுமையான காயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஓர் இளம் வீரனை சந்தித்தார். ''உனக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?'' என்று கனிவுடன் கேட்டார்.

அவனுக்கு ஆபிரகாம் லிங்கனை அடையாளம் தெரியவில்லை. யாரோ மருத்துவமனையில் இருக்கும் ஒரு நபர் என நினைத்துக்கொண்டு, ''என்னால் இப்போது எழுத முடியவில்லை. எனக்காக நீங்கள் என் அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுத முடியுமா?'' என்று கேட்டான்.

பேப்பரும் பேனாவும் எடுத்து எழுத ஆரம்பித்தார் லிங்கன். 'தேசத்தைக் காக்கும் கடமையில் நான் காயமடைந்து விட்டேன். நான் பிழைக்க மாட்டேன். கண்டிப்பாக வீரமரணம் அடைவேன். தயவுசெய்து துக்கம் அடைய வேண்டாம்.

# இயற்கை தந்த வரம்!

சொட்டுநீர்ப் பாசனம் பற்றி தெரியாதவர்களே இருக்க முடியாது. நீரை மொத்தமாக செடிகளுக்கு ஊற்றாமல், சொட்டு சொட்டாக வேருக்கு நீர் விட்டு விவசாயம் செய்வதுதான் சொட்டுநீர்ப் பாசனம் ஆகும். குறைந்த தண்ணீரில் நிறைவான விவசாயம் செய்வதை சாத்தியமாக்கிய நவீன காலக் கண்டுபிடிப்பு இது.

இதைக் கண்டுபிடித்தவர் சிம்ச்சா பிளாஸ் என்னும் போலந்து நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர். 1930களில் சிம்ச்சா பிளாஸ் வறண்ட நிலத்தில் நிற்கும் மரம் ஒன்றைப் பார்த்தார். அந்த மரத்தை யாருமே பராமரிக்கவில்லை. அதற்கு யாருமே நீர் ஊற்றவில்லை. மழையும் இல்லை. இருந்தாலும் அது உயிர்ப்புடன் இருந்தது. அதைப் பார்த்து அவர் ஆச்சரியப்பட்டார்.



மரத்தின் கீழே தோண்டி வேர்களை ஆராய்ந்தபோது, மரத்தை விட்டுத் தள்ளி ஓரிடத்தில் ஒழுகிய குழாய் நீர் சொட்டு சொட்டாய் இந்த வேருக்கு வருவதைக் கண்டார். சிறு சொட்டு நீர்த் துளிகள் பெரிய மரத்தைக் காப்பாற்றுவதைப் பார்த்ததும் சொட்டுநீர்ப் பாசனம் பற்றிய எண்ணம் அவருக்குத் தோன்றியது.

தீயணைப்புத் துறை பயன்படுத்தும் குழாய்களை வரவழைத்தார். அவற்றை வைத்து சொட்டுநீர்ப் பாசன உபகரணம் கண்டுபிடித்தார். 1950ம் ஆண்டில் பிளாஸ்டிக் பயன்பாடு வந்த பிறகு பிளாஸ்டிக் குழாய்களை உபயோகப்படுத்தி சொட்டுநீர்ப் பாசனக் கருவிகளை இன்னும் எளிதாக வடிவமைத்தார். அவர் கண்டுபிடித்த முறையைத்தான் உலகில் பல தேச மக்களும் உபயோகப்படுத்துகிறார்கள்.

இயற்கை தந்த வரமாக இந்தப் பாசன முறை, பல கோடி மக்களின் பசியாற்றுகிறது.



கடவுள் துணையிருப்பார்' என அவன் சொல்லச் சொல்ல லிங்கன் எழுதினார். அவனால் கையெழுத்து போட முடியாது என்பதால், 'உங்கள் மகனுக்காக ஆபிரகாம் லிங்கன் எழுதியது' என்று எழுதி தன் கையெழுத்தைப் போட்டார்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தான் வீரன். அதை எழுதியது ஜனாதிபதி என அறிந்து ஆச்சர்யம் அடைந்தான். அவனை அமைதியாக வருடிய ஜனாதிபதி, ''உனக்கு வேறு ஏதாவது உதவி வேண்டுமா?'' என்றார்.

''நீங்கள் தயவுசெய்து என் கைகளைப் பற்றிக்கொள்ள முடியுமா? நான் நிம்மதியாக மரணத்தைச் சந்திக்க விரும்புகிறேன்'' என்றான் அவன். மரணம் அவனை அணைத்துக்கொள்ளும் வரை, அவன் கரங்களைப் பற்றியபடி ஆறுதல் வார்த்தைகள் பேசிக்கொண்டே இருந்தார் லிங்கன். அன்பு ஒரு வரம்.



# கேலியே வரம்!

பிரேசிலைச் சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்து வீரர் பீலே. அவரின் உண்மையான பெயர் தாமஸ் எடிசன். ஆம், விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனின் நினைவாக அவருக்கு அந்தப் பெயரை அவர் அப்பா வைத்தார்.

ஆனால், நண்பர்கள் அவரை அப்பெயரைச் சொல்லி அழைக்கவில்லை. சிறு வயதிலிருந்தே பீலேவுக்கு ஆங்கில உச்சரிப்பு சரியாக வராது. அவர்கள் ஊரில் இருந்த கால்பந்து கோல் கீப்பர் ஒருவரின் பெயர் 'பைல்'. ஆனால் பீலே அதை சரியாக உச்சரிக்கத் தெரியாமல் அப்பாவியாக 'பீலே' என்று உச்சரிப்பாராம். இதை வைத்து அவரை அனைவரும் கேலி செய்தனர். பீலே அதைக் கண்டுகொள்ளாமல் கடந்து போனாலும், பின்னாலேயே வந்து 'பீலே... பீலே...' என்று கிண்டல் செய்வார்கள். அப்படிச் சொல்லிச் சொல்லி பள்ளியில் அவர் பெயர் 'பீலே' என்றே ஆகிவிட்டது.

ஆனால் பீலே அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், தினமும் கால்பந்து பயிற்சி பெற்றார். பல போட்டிகளை வென்றார். தன் தாய்நாட்டு அணிக்காக உலகத் தரத்தில் விளையாட ஆரம்பித்து உலகப்புகழ் பெற்றார். நண்பர்கள் கேலியாக வைத்த 'பீலே' என்ற பெயரை மக்கள் அதன்பின் பெருமையாக உச்சரிக்க ஆரம்பித்தனர்.

நண்பர்கள் வைத்த கேலிப்பெயரைக் கண்டுகொள்ளாமல் உழைத்து புகழ்பெற்று முன்னேறி, அந்தப் பெயருக்கே புகழ் கிடைக்க வைத்த அவரது திறமையையும் உழைப்பையும் பார்த்து உலகமே வியந்து போயிற்று. நம் பெயரை வைத்து நம்மை யாரும் எடை போடுவதில்லை. ஆனால், நம் திறமை மூலமே நம் பெயருக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.



# பிளஸ்... மைனஸ்..!

அறிஞர் ஒருவர், 'நல்லவற்றையே கொண்டாடுங்கள், நல்லவையே நடக்கும்' என்ற தலைப்பில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சுய பரிசோதனை செய்யச் சொன்னார். ''ஒரு வெள்ளைத் தாளை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் நடுவே ஒரு கோடு போடுங்கள். வலது புறம் பெரிதாக 'பிளஸ்' குறியிட்டு உங்களுக்கு கிடைத்திருக்கும் நல்ல விஷயங்களை எழுதுங்கள். இடது புறம் 'மைனஸ்' குறியிட்டு உங்கள் பிரச்னைகளை எழுதுங்கள்'' என்றார்.

அனைவரும் எழுத ஆரம்பித்தார்கள். பெரும்பாலானோருக்கு மைனஸ் குறியில்தான் எழுத நிறைய இருந்தது. ஒருசிலர் மட்டுமே பிளஸ் குறியில் நிறைய எழுதி இருந்தார்கள்.

ஒருவர் மட்டும் மைனஸ் குறியில் பெரிய பட்டியல் இட்டிருந்தார். ஆனால், ''பிளஸ் குறியில் எழுத ஒன்றுமே இல்லை'' என்று கூறினார். அறிஞர் அவரை மேடைக்கு அழைத்தார்.

அவரிடம் இருந்து பேப்பரை வாங்கிக்கொண்டார். பிறகு அவரிடம் கேட்டார். ''உங்கள் மனைவி உங்களைப் பிரிந்து எவ்வளவு காலம் ஆகிறது?'' அந்த மனிதருக்குக் கோபம் வந்து விட்டது. ''என் மனைவி என்னை விட்டுப் பிரிந்து விட்டதாக யார் சொன்னது? என்னுடன்தான் இருக்கிறார். நாங்கள் அன்பாகத்தான் வாழ்கிறோம்!'' அறிஞர் உடனே பிளஸ் பகுதியில் கொட்டை எழுத்தில் எழுதினார். ''அன்பான மனைவி உடன் இருக்கிறார்!''

பின் அவரிடம் கேட்டார். ''உங்கள் குழந்தைகள் எந்த சிறையில் இருக்கிறார்கள்?'' அந்த நபருக்கு இன்னும் கோபம் வந்தது. ''என் பிள்ளைகள் ஜெயிலுக்குப் போகிற அளவுக்கு கெட்டவர்கள் இல்லை!'' என்றார். அறிஞர் அடுத்ததாக பிளஸ் பகுதியில் எழுதினார். ''நல்ல பிள்ளைகள் இருக்கிறார்கள்...''


பின் அறிஞர் கேட்டார். ''உங்கள் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா?'' அந்த மனிதர் பொறுமையை இழந்தார். ''மருந்து கண்டுபிடிக்கப்படாத நோய் எதுவும் எனக்கு இல்லை.'' அறிஞர் இப்போது பிளஸ் பகுதியில் எழுதினார். ''கொடிய நோய்கள் இல்லை!''

இப்படியே அந்த நபர் எதிர்பார்க்காத கேள்விகள் பலவற்றைக் கேட்டு, பிளஸ் பகுதியில் எழுதிக்கொண்டு போன அறிஞர், ஒரு கட்டத்தில் நிறுத்தி விட்டுச் சொன்னார். ''இவை எல்லாம் சாதாரண நன்மைகள் அல்ல. இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும், நம் வாழ்க்கை நரகமாகிவிடும். இப்படிப்பட்ட வரங்கள் எல்லாம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குத் தெரியாமலேயே கிடைத்திருக்கின்றன. எல்லாவற்றையும் கேட்டு எழுத ஆரம்பித்தால், உங்களுக்கு பிளஸ் பகுதியில் எழுத இன்னும் பல பக்கங்கள் தேவைப்படும்...'' என்றார்.

அந்த நபர் புதிய மனிதராகத் திரும்பிப் போனார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்களின் பிளஸ் பட்டியலும் அதிகரித்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இப்படித்தான் பலரும் இருக்கிறார்கள். எத்தனையோ நன்மைகள் நம்மிடம் இருந்தாலும், நமக்கு நடந்திருந்தாலும் அவற்றை அங்கீகரிக்க மறந்து விடுகிறோம். குறைகளை மட்டுமே பெரிதாக்கி கவலை கொள்கிறோம்.

மைனஸ் பட்டியல் அனைவரின் வாழ்க்கையிலும் இருக்கவே செய்கிறது. அப்படி இல்லாத ஒருவர், இதுவரை பிறந்ததில்லை; இனியும் பிறக்கப் போவதில்லை. எனவே, பிரச்னைகளே இல்லாத வாழ்க்கைக்கு ஆசைப்பட வேண்டியதில்லை. உங்கள் பிளஸ் பட்டியலை அறிந்துகொள்ளுங்கள். 'வாழ்க்கையில் எதுவுமே சரியில்லை' என்ற கற்பனை அபிப்ராயம் இல்லாமல் இருந்தால் போதுமானது. ●






MAKE AN
EVERLASTING
IMPRESSION
Crafted for comfort
LINEN PARK™
LINEN DHOTIS • SHIRTS • FABRICS
A Premium Product from
RAMRAJ ©
Available 50+ Colors
Available at Company Showrooms & All leading Textile Shops



RAMRAJ
VESHTI + T-SHIRT
COMBO PACK
₹ 895/-
வேட்டியின்
வெண்மை
T-Shirt -ன்
மென்மை
மதிப்பு மிக்க உங்கள் குடும்ப
நேரத்திற்கென,
ராம்ராஜ் வழங்குகிறது...!
வேட்டியுடன் T-சர்ட்
காம்போ பேக்
இனி வீட்டிலும்
Veshtee™
VESHTI + T-SHIRT
COMBO PACK
from the house of
RAMRAJ
UNIBRO®
கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்
shop online @ www.ramrajcotton.in


RAMRAJ
LittleStars™
CULTURE CLUB
KIDS MATCHING DHOTI & SHIRT


RAMRAJ
தெய்வீக
அம்சங்கள் நிறைந்த
ராம்ராஜ்
பஞ்சகச்ச வேட்டிகள்
Srimad Bhagavad Gita Bhasya
RAMRAJ
ACHARYA
பஞ்சகச்ச வேட்டிகள்
9+5, 10+6 ரெடிமேடாகவும் கிடைக்கும்.



# நல்வரங்கள் ஐந்து!

நாம் வெற்றியுடன் அமைதியாக வாழ வேண்டும். அதற்கு ஐந்து நல்வரங்கள் வேண்டும். அதற்காகவே, 'உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்வோம்' என வாழ்த்துகிறேன். இதைவிட ஒருவருக்கு வேறென்ன வேண்டும்?

நீங்களே எண்ணிப் பாருங்கள். உடல்நலம் வேண்டுமா? இதை 'வேண்டாம்' என யாரும் சொல்லப் போவதில்லை. உடல்நலத்துடன் வாழும் ஒருவருக்கு அடுத்த தேவை, நீளாயுள். நாம் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும். அறிவை அறிவதற்காகப் பிறந்திருக்கிறோம். அதற்கான வழியில்தான் வாழ்ந்து வருகிறோம். அது நிறைவேற வேண்டும். அதற்கு முழுமையான ஆயுள் தேவைப்படும். இடையில் துண்டு போட்ட மாதிரி இந்த உயிரை விட்டுவிட்டால் நாம் செய்ய வேண்டிய வேலை முடியாது. ஆகவே, ஒவ்வொருவருக்கும் நீண்ட ஆயுள் வேண்டும்.

அடுத்தது, நிறை செல்வம். இந்த உலகத்தில் வாழும்வரை நமக்கு வசதிகள் வேண்டும் அல்லவா? அவற்றை உருவாக்கிகொள்வதற்காகவே மனித இனம் தினம் தினம் உழைத்துக்கொண்டிருக்கிறது. வாழ்க்கை வசதிகளை அடைவது மட்டுமல்ல, 'எல்லாம் நல்லபடியாக அமைய வேண்டும்' என்ற நற்சிந்தனையும் நிறைவான செல்வம்தான்.

உயர்புகழ் என்றால் என்ன? நம்முடைய செயல் எல்லோருக்கும் நன்மை தரும்படியாக அமைய வேண்டும். அப்படி அமையும்போது, அதனால் பயனடைந்த மக்கள் பாராட்டுவார்கள். அதுவே நாம் அடையும் புகழ். 'எப்படி வேண்டுமானாலும் புகழ் பெறலாம்' என்பது முறையல்ல. உலகத்துக்கு நன்மையான செயல்களையே செய்து, அதனாலே மக்கள் மனம் நிறைவு பெற்று, அவர்கள் வாழ்க்கையில் துன்பம் நீங்கி, இன்பம் மலர வேண்டும். அதைக் காணும்பொழுது மக்கள் அளிக்கக்கூடிய ஒரு வாழ்த்து, ஒரு மனநிறைவுதான் புகழ்.

புகழ் என்பது, ஒருவர் தான் விரும்பிப் பெறுவதோ, தானே ஏதாவது செய்து அதன் மூலமாக வர வேண்டும் என்று நினைப்பதோ அல்ல! புகழ் என்பது ஏதோ நமக்குத் தனிப்பட்ட சொத்தும் அல்ல! 'நாம் செய்யும் செயல்கள் எல்லோருக்கும் நன்மை அளிக்கட்டும்' என்ற உயர்ந்த சிந்தனையே புகழின் பின்னால் இருக்க வேண்டும்.

கடைசியாக, மெய்ஞானம். நாம் எந்த நோக்கத்துடன் பிறந்தோமோ, அந்த நோக்கத்தை அடைவதற்கு மெய்ப்பொருள் விளக்கம் வேண்டும். வாழ்வை அதுவே மலரச் செய்யும்.

ஆகவேதான், 'உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்க' என வாழ்த்துகிறேன். ●

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**

புகழ்பெற்ற ஜோதிடர் ஒருவர் இருந்தார். ஒருவரின் ஜாதகத்தை அவர் கணித்துச் சொன்னால், அது அந்த பிரம்மாவே சொன்னது போல! அவ்வளவு துல்லியமாக இருக்கும். ஒரு நாள் மாலை ஏழை கூலித் தொழிலாளி ஒருவர் அவரிடம் வந்தார். ''நான் மிகவும் வறுமையில் இருக்கிறேன். கடன் பிரச்னை வாட்டுகிறது. என் இரண்டு பெண்களும் வளர்ந்து திருமணத்துக்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை எப்படிக் கரையேற்றப் போகிறேன் என்று தெரியவில்லை. அதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று என் ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றார்.

ஜோதிடர் அந்த ஏழைத் தொழிலாளியின் ஜாதகத்தை வாங்கிப் பார்த்தார். உடனே அவர் முகம் மாறியது. உடனே அவர் தொழிலாளியிடம், ''ஐயா! எனக்கு இன்றைக்கு நிறைய வேலை இருக்கிறது. உங்கள் ஜாதகத்தை நிதானமாகப் பார்க்க இப்போது நேரம் இல்லை. நாளைக்கு வாருங்கள்'' என்றார். அந்தத் தொழிலாளி கொடுத்த தட்சணையைக்கூட, ''நாளைக்கு பார்த்துக்கலாம்'' என்று சொல்லிவிட்டு வாங்க மறுத்தார்.



இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜோதிடரின் மனைவி, ''என்னங்க இது? இன்றைக்கு உங்களுக்கு வேறு வேலைகள் எதுவும் இல்லை. ஏன் இப்படிப் பொய் சொன்னீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு ஜோதிடர், ''ஜாதகப்படி அவரது ஆயுள் இன்று மாலை முடியப்போகிறது. பரிகாரம் செய்வதற்குக்கூட வாய்ப்பு இல்லை. இதை அவரிடம் தெரிவிக்க மனமில்லை. அதனால்தான் பொய் சொன்னேன்'' என்றார்.

இதற்கிடையில் அந்தத் தொழிலாளி நடந்து தன் ஊரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். இரவு நெருங்கும் நேரம். திடீரென பலத்த மழை கொட்டியது. அவசரமாக ஓடி, அருகிலிருந்து பாழடைந்த சிவன் கோயில் மண்டபத்தில் ஒதுங்கினார் அவர். மண்டபத்தில் நின்றபடி, சிதிலமடைந்து கிடக்கும் கோயிலின் நிலையைக் கண்டு அவர் வருந்தினார். 'எனக்கு மட்டும் வசதி இருந்தால், இந்தக் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வேன்' என்று நினைத்துக்கொண்டார். அத்துடன் நிற்காமல், கண்களை மூடியபடி, அந்தக் கோயிலை தான் சீரமைப்பதாக மனதுக்குள் கற்பனை செய்து பார்த்தார்.

# நிறைந்த மனமே நல்ல வரம்!



## உறவுகளில் இதை மறக்கக்கூடாது!

- வீட்டில், உறவுகள் மத்தியில், நீங்கள் நினைப்பது எல்லாமே உடனடியாக நடக்க வேண்டும் என ஆசைப்படாதீர்கள். களை உடனே முளைக்கும்; பயிர் தாமதமாகவே முளைக்கும். நல்ல விஷயங்களுக்குக் காத்திருங்கள்.
- யாருக்காவது உங்கள் இதயத்தில் இடம் கொடுக்கிறீர்கள் என்றால், கவனமாகத் தேர்ந்தெடுத்து கொடுங்கள். தவறான மனிதர்களுக்கு அன்பைக் கொடுத்தால், பிறகு தவிக்கப் போவது நீங்கள்தான்.
- உங்களை நேசிக்கும் மனிதர்களையும் கவனமாக நடத்துங்கள். அவர்களைக் கனிவுடன் நடத்துங்கள். அவர்கள் இதயம் வலி சுமக்கக் காரணமாகிவிடாதீர்கள்.
- உறவினர்கள் மத்தியில் நல்ல நட்பை வளர்த்தெடுங்கள். நண்பர்களை நம்பிக்கை மிக்க உறவாகக் கருதுங்கள்.
- நிர்ப்பந்தம் காரணமாக எந்த உறவையும் ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். சரியான காரணங்களுக்காக மட்டுமே மனிதர்களுடன் இணைந்திருங்கள்.
- ‘அவர் அப்படி நினைக்கிறாரோ’, ‘இவர் இப்படிப் பேசுவதன் உள் அர்த்தம் இதுவாக இருக்குமோ’ என்பது போன்ற யூகங்கள் வேண்டாம். எதையும் வெளிப்படையாகப் பேசுங்கள்.
- நீங்கள் பழகும் மனிதர்களிடம் நல்ல விஷயங்களும் இருக்கும்; கெட்ட விஷயங்களும் இருக்கும். யாரும் நூறு சதவிகிதம் முழுமையானவர்கள் இல்லை. இந்த உண்மை புரிந்து, எவரையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.
- நேரத்தைத் தேடினால் எப்போதும் கிடைக்காது. நேசிப்பவர்களுடன் செலவிட, நீங்கள்தான் நேரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

பிரமாண்டமான ராஜ கோபுரம், சுற்றுப் பிராகாரங்கள், மண்டபங்கள் என எல்லாம் கட்டி, வேத மந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகம் நடத்துவது போல மனதுக்குள் காட்சிகள் ஓடின.



அந்தக் காட்சிகளில் மகிழ்ந்த அவர், ஏதோ சத்தம் கேட்டு கண்களைத் திறந்து பார்த்தபோது, மண்டபத்தில் பாம்பு ஒன்று அவரைக் கொத்தத் தயாராக இருந்தது. அதிர்ச்சியடைந்த அவர், மண்டபத்தை விட்டு வெளியே ஓடினார். இவர் வெளியே வந்ததுமே, ஒரு இடி பெரும் ஓசையோடு விழுந்து அந்த மண்டபம் நொறுங்கியது. அதில் ஒரு கல் தெறித்து வந்து இவர் மேல் விழ, சிறு காயத்துடன் தப்பினார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாத அவர், தட்டுத் தடுமாறி வீடு வந்து சேர்ந்தார்.

மறுநாள் வலி குறைந்திருக்க, அவர் ஜோதிடரை சந்திக்கச் சென்றார். அவரைப் பார்த்ததும் ஜோதிடருக்கு ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. மாண்டவன் மீண்டு வந்ததைப் பார்த்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது அவர் மனநிலை. வந்தவரை அமரச் சொல்லிவிட்டு, ஜாதகத்தை மீண்டும் ஆராய்ந்தார். அவர் கணக்கு சரியாகவே இருந்தது. ‘இப்படி ஒரு கண்டத்திலிருந்து பிழைக்க வேண்டுமென்றால், அந்த நபர் சிவன் கோயில் ஒன்றைக் கட்டி அதற்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்’ என்று பரிகாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர் பரம ஏழை. அந்த பரிகாரத்தை ஜோதிடரே சொல்லியிருந்தாலும், அதை அவரால் ஒரே இரவுக்குள் செய்திருக்க முடியாது. பிறகு அவர் எப்படிப் பிழைத்தார்?

ஜோதிடருக்குக் குழப்பம். தொழிலாளியிடம் விசாரித்தார். தான் சென்றபோது மழை பெய்ததையும், அப்போது ஒரு பாழடைந்த சிவாலயத்தில் ஒதுங்கியதையும் கூறினார் தொழிலாளி. ‘‘அப்புறம் என்ன ஆனது?’’ என்று ஜோதிடர் ஆர்வமாகக் கேட்க, ‘அந்த சிதிலமடைந்த ஆலயத்தைப் பார்த்து வருந்தியதாகவும், தனக்கு வசதியிருந்தால் கும்பாபிஷேகம் செய்து வைக்கலாமே என்று கருதியதாகவும்’ கூறினார். ஜோதிடருக்கு உண்மை புரிந்தது. மனதுக்குள் செய்த கும்பாபிஷேகமே அவருக்கு முழுமையான பலன்களைத் தந்து, இறைவன் அருளால் அவரது விதி மாற்றி எழுதப்பட்டதை உணர்ந்துகொண்டார். ‘‘இது உங்களுக்கு மறுஜென்மம். இனி உங்களுக்கு எந்தக் குறையும் இருக்காது’’ என்று அவரை வழியனுப்பி வைத்தார்.

மனதில் தோன்றும் நற்சிந்தனையே, வரமாக மாறி நம் விதியை மாற்றும். எப்போதும் நல்லதையே நினைப்போம். தலையெழுத்து மாறும். ●



# அண்டை வீடு அமைவது வரம்!

'சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து ஆசிர்வதிக்க வேண்டும்' என திருமண அழைப்பிதழ்களில் இருக்கும். உறவுகளும், நட்பும் எல்லோருக்கும் தெரியும். அது என்ன 'சுற்றம்'? நம்மைச் சுற்றி வசிப்பவர்கள்தான் 'சுற்றம்'. ''எங்கள் வீட்டுக் கல்யாணத்துக்கு வரும்போது உங்களைச் சுற்றி வசிப்பவர்களையும் அழைத்து வாருங்கள்'' என்று வரவேற்கும் பழக்கம் நமக்குக் காலம் காலமாக இருக்கிறது. அந்த அளவுக்கு ஒவ்வொருவரின் வாழ்விலும் தவிர்க்க முடியாதவர்கள், அண்டை வீட்டுக்காரர்கள்.

சொந்தங்களும் நட்புகளும் நமக்கு ஆயிரம் பேர் இருக்கலாம். ஆனால், பக்கத்து வீட்டுக்காரர்கள்தான் முதல் சொந்தங்களாய் விளங்குகிறார்கள். அவசரத்துக்கு அவர்கள்தான் வந்தாக வேண்டும். திடீரென உடல்நலம் பாதிக்கப்படும் பலரை அவசரமாக மருத்துவமனைக்குக் கூட்டிச்சென்று சேர்ப்பவர்கள் அண்டை வீட்டுக்காரர்களே! குழந்தைகள் அழும்போது ஓடிவந்து அரவணைத்து, அழுகையைப் புன்னகையாக மாற்றுவதும் அவர்களே! நம் வீட்டுப் பிள்ளைகளுக்கு வரன் பார்க்கும்போது, நற்சான்றிதழ் வழங்குவது அவர்களே!

அண்டை வீட்டுக்காரர்களுடன் அன்பை வளர்த்துகொள்வதே நிம்மதியான வாழ்வுக்கு வழி. அண்டை வீடுகளில் நல்லவர்கள் வாழும் சூழலைப் பெறுவது வரம். பண்டிகை தினங்களில் அத்தனை வீடுகளுடனும் இனிப்புகளைப் பரிமாறி வாழ்தல் சுகம்.

அண்டை வீட்டுக்காரர்களுடன் நல்லுறவு வேண்டும் என வலியுறுத்தும் பழமொழிகள் உலகம் முழுக்க உண்டு. 'உன் அண்டை வீட்டுக்காரன் நல்லவனாயிருந்தால் உன் வீடு கூடுதலாக நூறு பவுன் பெறும்' என செக் நாட்டில் பழமொழி உண்டு. 'அண்டை வீட்டுக்காரருக்கு நஷ்டமில்லாமல் நாம் அடையும் லாபமே நிஜமான லாபம்' என்கிறது ஜெர்மானியப் பழமொழி. 'பக்கத்து வீட்டுக்காரரே நாம் முகம் பார்த்துக் கொள்ளும் கண்ணாடி' என பிரிட்டனில் பழமொழி உண்டு. 'பக்கத்து வீட்டுக்காரன் பந்துவை விட மேலானவன்' என்கிறது அல்பேனிய பழமொழி. 'அண்டை வீட்டை விலைக்கு வாங்குவதை விட, அண்டை வீட்டுக்காரன் மனதை வெல்வதே சிறந்ததாகும்' என ரஷ்யப் பழமொழி உள்ளது.



பக்கத்து வீட்டுக்காரர்களிடம் சண்டை போட்டுக் கொண்டு மனக்கசப்போடு இருப்பவர்களுக்கு எவ்வளவு வசதி வாய்ப்புகள் வந்தாலும் வாழ்க்கை இனிக்காது. சதா பக்கத்து வீட்டுக்காரரையே நினைத்து பதற்றமாக இருப்பார்கள். அவர்களின் செயல்கள், வாழ்க்கைமுறை என்று கவனித்துக் கொண்டே தங்கள் நிம்மதியை இழப்பார்கள்.

● கணேசன் வாடகைக்குக் குடியிருந்த தெருவில் யாருடனும் பேச மாட்டார். பக்கத்து வீட்டுப் பையன்கள் கிரிக்கெட் ஆடும்போது பந்து வந்து வீட்டுக்குள் விழுந்தால் டென்ஷனாகி திட்டுவார். அவர் வீடு திரும்பும்போது வாசலில் யாராவது வாகனத்தை விட்டிருந்தால், அதை அப்படியே ரோட்டில் எடுத்துப் போய் விடுவார். இப்போது கணேசன் சொந்த வீடு கட்டிக்கொண்டு அங்கிருந்து வேறு பகுதிக்கு வந்துவிட்டார். ஆனாலும் பழைய வீட்டுக்கும் இன்னமும் கடிதங்கள் வருகின்றன. முன்பு கிரிக்கெட் ஆடிய பக்கத்து வீட்டுப் பையன்கள் யாராவது அவரைத் தேடிவந்து, ''பழைய அட்ரஸுக்கு இந்த லெட்டர் வந்தது அங்கிள்'' என்று கடிதங்களைக் கொடுக்கும்போது கூனிக் குறுகிப் போகிறார். இப்போது அவர் அக்கம்பக்க வீடுகளை அணுகும் முறையே மாறியிருக்கிறது.

● சரஸ்வதிக்கு அடுத்த வீட்டு அம்புஜம் ஊருக்குக் கிளம்பினால் தங்கள் ஃப்ரிட்ஜில் ஒரு நாளைக்குக் கூட பால் வாங்கி வைத்துக்கொள்ளப் பிடிக்காது. ''ஐயையோ! எங்க ஃப்ரிட்ஜில் இடமில்லையே?'' என்று கையை விரித்து விடுவார். ஆனால், பக்கத்து வீட்டுக்கு வரும் கடிதங்கள், நியூஸ் பேப்பர், பால் பாக்கெட்



என எல்லாவற்றையும் பத்திரமாக எடுத்துவைத்துக் கொடுக்கும் அண்டைவீட்டினர் நிறைய பேர் உண்டு.

● அடுத்த வீட்டிற்கு புதிதாகக் குடி வந்த சுசித்ராவிடம் பத்மா கண்டிப்பாகக் கூறிவிட்டார். ''எங்க வீட்டு வேலைக்காரியை வெச்சுக்காதேம்மா! அப்புறம் எங்களுக்கு தொந்தரவா போயிடும். இந்தக் காலத்துல வேலைக்கு ஆள் கிடைக்கிறதே குதிரைக்கொம்பா இருக்கு.'' ஆனால், புதிதாகக் குடிவருபவர்களுக்கு மளிகை எங்கே வாங்கலாம், பால்காரர் யார், கேஸ் ஏஜென்சி எங்கே இருக்கிறது என எல்லாவற்றுக்கும் வழிகாட்டும் பலர் உண்டு.

● ராமநாதன் ரொம்ப கோபக்காரர். முகவரி தவறுதலாக தன் வீட்டுக்கு வரும் எந்தக் கடிதத்தையும் கிழித்துப் போட்டு விடுவார். உள்ளே செக் இருக்கிறதா, இன்டர்வியூ கடிதமா என்றெல்லாம் பார்க்கவே மாட்டார். ''முகவரியைத் தெளிவாகக் கொடுக்காதது அவங்க தப்புதானே'' என்பார். ஆனால், தவறுதலாக வந்த தபால்களை சரியான இடம் தேடிச் சென்று கொடுக்கும் நல்ல மனிதர்கள் நிறைய பேர் உண்டு.

● ரோகினியின் அப்பாவுக்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்த்தார்கள். விஷயம் தெரிந்தவுடன் அரக்கப் பரக்க மருத்துவமனைக்கு ஓடினாள். பதற்றத்தில் தன் வீட்டு சாவியை பக்கத்து வீட்டில் கொடுக்க மறந்துவிட்டாள். 'மாலையில் பள்ளியிலிருந்து திரும்பி வரும் மகன் விஷால் என்ன செய்வான்' என்ற கவலை மருத்துவமனைக்கு போன பிறகே வந்தது. பதைபதைப்புடன் அவள் திரும்பி வந்தபோது மணி இரவு ஏழு. மகன் பக்கத்து வீட்டில் ஹார்லிக்ஸ் குடித்துவிட்டு ஹோம் ஒர்க் எழுதிக் கொண்டிருந்தான். ரோகினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். சொந்த வீட்டில் சாப்பிட அடம் பிடிக்கும் பல குழந்தைகள், பக்கத்து வீட்டில் போய் சாப்பிடும். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்' என சும்மாவா சொன்னார்கள்!

● ரவிக்கு திடீரென வேலை போய்விட்டது. எப்போதும் காலையில் பரபரப்பாக ஆபீஸ் கிளம்பும் அவன் சோர்வாக வீட்டில் இருப்பதை பக்கத்து வீட்டுக்காரர் கவனித்து விசாரித்தார். ஒரே வாரத்தில் தனக்குத் தெரிந்த இன்னொரு நிறுவனத்தில் அவனை வேலைக்குச் சேர்த்துவிட்டார்.

பயிருக்கு வேலி பாதுகாப்பு தருவதைப் போல, ஒவ்வொரு குடும்பத்துக்கும் அண்டை வீட்டுக்காரர்களே பாதுகாப்பு அரண்கள். தோழமை, நட்பு, பாசம், கஷ்டத்திற்கு உதவுதல் போன்ற சின்னச் சின்ன விஷயங்களால் நம் வீட்டை அற்புதமான சூழலாக மாற்ற முடியும். அண்டை வீட்டினருடன் நாம் பழகுவதைப் பார்த்தே நம் குழந்தைகளும் பாதுகாப்பு, பரந்த மனப்பான்மை, விட்டுக்கொடுத்தல் என எத்தனையோ நல்ல குணங்களோடு வளர்வார்கள். அன்பு கொடுக்கக் கொடுக்க அட்சய பாத்திரமென பெருகும். அன்பைப் பெறுபவர்களும் அன்பைப் பொழிபவர்களும் சந்தோஷத்தில் திளைப்பது நிச்சயம். ●

## குழந்தை மனமே வரம்!

ஒரு நடுத்தர வயது நபருக்கு மனதே சரியில்லை. சொல்லமுடியாத வெறுமை அவருக்கு இருந்தது. சரியான தூக்கம் வரவில்லை. தூக்கம் வராத காரணத்தால் பசிக்கவில்லை. சரியாக சாப்பிடாத காரணத்தால் உடல் சோர்வாக இருந்தது. உடல் சோர்வாக இருந்த காரணத்தால் இன்னும் அதிக மன அழுத்தம் அடைந்தார்.

வேறுவழியின்றி ஒரு மனநல மருத்துவரைப் பார்த்தார். மனநல மருத்துவர் அவரை சோதித்து விட்டு, அவரிடம் கலந்து பேசிவிட்டு, ''உங்கள் செல்ல மகனோடு தினமும் இருமுறை சதுரங்கம் விளையாடுங்கள்'' என்று சொன்னார். ''குழந்தையோடு குழந்தையாக விளையாடும்போது உங்கள் மனமும் குழந்தையாகிவிடும். ஐந்து நாட்கள் விளையாடினால் உங்கள் வெறுமை காணாமல் போகும்'' என்றார் மருத்துவர்.

இதைக் கேட்ட அந்த நபர், 'இவ்வளவு எளிதான சிகிச்சையா' என்று வியந்து தினமும் தன் செல்ல மகனோடு சதுரங்கம் விளையாடினார். வெகுநாள் கழித்து சதுரங்கம் விளையாட அவருக்குப் பிடித்திருந்தது. ஆனாலும் அவரின் மனவெறுமை போகவில்லை. திரும்பவும் அதே மருத்துவரிடம் சென்று, ''டாக்டர், நீங்க சொன்னபடி விளையாடினேன். ஆனால் மனவெறுமை போகவில்லையே'' என்று வருந்தினார்.

டாக்டர் பதிலுக்கு, ''இன்று போய் அதே விளையாட்டை விளையாடுங்கள். விளையாடும்போது உங்கள் மகன் கையைப் பாருங்கள்'' என்றார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் டாக்டர் சொன்னதைச் செய்தார். மகன் முதலில் ஒரு சிப்பாயை வெட்டினான். ''ஹை... சிப்பாயை வெட்டிட்டேன்'' என்று வெட்டிய சிப்பாயை எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டான். இறுகப் பற்றிக் கொண்டான். அப்பா பதிலுக்கு மகனின் ராணியை வெட்டி அதைத் தூக்கிப் போட்டார். பதிலுக்கு மகன் அப்பாவின் குதிரையை வெட்டி, ''ஹையா... குதிரையை வெட்டிவிட்டேன்'' என்று அதை எடுத்து தன் கையில் சிப்பாயோடு இறுக்கிக் கொண்டான்.

அப்போதுதான் அப்பாவுக்குப் புரிந்தது. 'நம் மகன் விளையாட்டை ரசித்து விளையாடுகிறான். நான் அதே விளையாட்டை சோர்வாக உணர்ச்சியே இல்லாமல் விளையாடுகிறேன்' என்பதை உணர்ந்தார்.

குழந்தைகளைப் போல நடிப்பது அல்ல மன உளைச்சலுக்கு சிகிச்சை. குழந்தையாகவே மாறுவதுதான் அதற்கு சிகிச்சை. இதைப் புரிந்து கொண்டு தன் மனதில் உள்ள அனைத்து எண்ணங்களையும் தூக்கிப் போட்டு விட்டு குழந்தையாகி, உற்சாகமாக சதுரங்கம் விளையாட ஆரம்பித்தார் அந்த அப்பா. அன்று இரவு அவரால் நிம்மதியாகத் தூங்க முடிந்தது.



## அறிவே அற்புத வரம்!

பார்வையற்ற ஒருவர் பசியோடு நடந்து வந்து கொண்டிருந்தாராம். ஒரு வீட்டில் அவரை அழைத்து திண்ணையில் அமர வைத்து, சாப்பிட உணவு கொடுத்தார்கள். பசியாறிய அவர் நன்றி சொன்னார். அப்போது வீட்டிலிருந்து குழந்தை அழும் சத்தம் கேட்டிருக்கிறது. கண் தெரியாதவர் கேட்டார், ''ஏன் குழந்தை அழுகிறது?''

"பால் குடித்தபோது குழந்தைக்குப் புரையேறி விட்டது."

"பால் எப்படி இருக்கும்?"

"கொக்கு போல இருக்கும்."

"கொக்கு எப்படி இருக்கும்?"

"உங்கள் கையை வளைத்து அதைத் தொட்டுப் பாருங்கள். அப்படித்தான் கொக்கு இருக்கும்."

# முத்திரை குத்த வேண்டாம்!

‘‘எங்க சிவாவுக்கு இட்லியே பிடிக்காது... தோசைதான் பிடிக்கும்’’, ‘‘என் பொண்ணுக்கு பஸ்ல ரொம்ப தூரம் போனாலே மூச்சு திணறும்...’’ இப்படிப் பல வசனங்களை குழந்தைகளின் பெற்றோர்கள் பேசிக் கேட்டிருப்போம். இதுதான் முத்திரை குத்துதல். ‘நீ இப்படித்தான்’ என்று குழந்தைகள் மனதில் ஆழமாகப் படிய வைத்தல். பல பெற்றோர்கள் இதைத் தங்களுக்குத் தெரியாமலேயே செய்து விடுகிறார்கள்.

பிறந்ததில் இருந்து ஏழு வயதுக்குள் ஒரு குழந்தையின் ஆளுமை உருவாகிறது. அந்த ஏழு வயதுக்குள் இப்படி பல முத்திரைகளைக் குத்தி, ‘நீ இப்படி’, ‘நீ அப்படி’ என்று சொல்லிக்கொண்டே இருந்தால், குழந்தைகள் அதை நம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். அதனால் அவர்களின் இயல்பான ஆளுமை பாதிக்கப்படுகிறது.

‘‘இவனுக்கு கணக்கே வராது’’, ‘இவளுக்கு உருளைக்கிழங்கு ஒத்துக்காது...’ என்றெல்லாம் சொன்னால், அவர்கள் அப்படித்தான் ஆகிவிடுவார்கள். இன்னும் சிலர், ‘‘இவன் மத்த விஷயத்துல எல்லாம் தைரியமானவன். ஆனா பேய்ன்னா பயப்படுவான்’’ என்பார்கள். அந்த முத்திரையை அப்படியே நம்பி வாழ்க்கை முழுவதும் ஆழ்மனதில் பேய் பயம் கொண்ட ஆளுமையாக அக்குழந்தை வளரும்.

தங்களுக்குப் பேச நன்றாக இருக்கிறது என்பதற்காக, பிறரிடம் தங்கள் குழந்தைகள் பற்றி



இப்படிப் பேசக்கூடாது. இப்படி முத்திரை குத்தப்பட்ட பல குழந்தைகள் எதிர்காலத்தில் அதை உடைத்து சிறப்பு பெற்றிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான குழந்தைகள், பெற்றோர் சொல்வதை உண்மை என்று நம்பி அது மாதிரியே வாழ்க்கையில் நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

குறைந்தபட்சம் பத்து வயது வரையாவது இதைச் செய்யாமல் இருக்க வேண்டும் என பெற்றோர் உறுதி எடுத்தால், அக்குழந்தையின் எதிர்காலம் சிறப்பாக அமையும்.



“ஆஹா... இவ்வளவு வளைவாகவும் பெரிதாகவும் இருக்கும் பொருளான பாலை குழந்தை வாயில் விட்டால் அது திணறத்தானே செய்யும்” என்றாராம் அவர்.

பலர் இப்படித்தான் இருக்கிறார்கள். தங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தை, தெரிந்த ஒரு விஷயத்தை வைத்து அளக்க முயற்சி செய்கிறார்கள். ஒற்றை வரி செய்திகளைப் படித்துவிட்டு, ‘இது இப்படித்தான் இருக்கும்’ என்று நமக்குத் தெரிந்த அறிவை வைத்து ஒரு விஷயத்தைக் கணிக்க முயற்சி செய்கிறோம். எப்போதோ ஒரு காலத்தில் கற்ற அறிவை மட்டும் வைத்துக் கொண்டு, அடுத்த 50 வருடங்களுக்கும் நடக்கும் புதிய புதிய உலக மாற்றங்களை அளக்க முற்படுகிறோம்.

தொடர்ந்து அறிவை வளர்த்துக் கொள்ளும்போது மட்டும்தான் புதிய கோணத்தில் எதையும் புரிந்துகொள்ள முடியும். கற்றல் என்பது கல்லூரியில் முடிவதில்லை. அது தொடர்ச்சியான விஷயம். எந்தத் துறையில் இருந்தாலும், அதில் நிகழும் மாற்றங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் அறிவு நீரோடை போல வளரும். கற்றல் இல்லாமல் போனால், பாசி படிந்த குளம் போல தேங்கிவிடுவோம். ●

# வாழ்வின் ஏழு அதிசயங்கள்!



பள்ளியிலிருந்து திரும்பியதும், உற்சாகமாக தாத்தாவிடம் ஓடி வந்தான் பேரன். ''தாத்தா! இன்னைக்கு எங்க டீச்சர் உலக அதிசயங்கள் ஏழு பற்றி பாடம் நடத்தினாங்க. அந்த அதிசயங்களின் படங்களை ஒட்டி, குறிப்பு எழுதச் சொல்லியிருக்காங்க. சீனப் பெருஞ்சுவர், தாஜ்மகால்... உங்களுக்குத் தெரியுமா தாத்தா?'' என்றான்.

தாத்தா சிரித்தார். ''நீ கேட்ட அதிசயங்களின் படங்களை வாங்கி ஒட்டித் தர்றேன். ஆனால், எனக்குத் தெரிந்த வாழ்வின் ஏழு அதிசயங்கள் வேற! அவை புத்தகங்களில் இல்லாதது; தனியாக அதற்குப் பாடமும் கிடையாது'' என்றார்.

''அப்படிப்பட்ட அதிசயங்கள் எது தாத்தா?''

''உனக்கு சொல்றேன். நாம கடைக்குப் போகலாம், வா'' என அழைத்துக்கொண்டு கிளம்பிய தாத்தா, அதிசயங்களைப் பட்டியல் போட்டார்.

- ஒவ்வொருவருக்கும் அம்மாவே முதல் அதிசயம். இந்த உலகத்துக்குள் ஒருவரை வரவேற்கும் முதல் மனுஷி, அம்மா. வாழ்க்கை முழுக்க அக்கறை காட்டும் அதிசயப் பிறவி. ஒன்பது மாதங்கள் கருவில் சுமந்து, மூன்று ஆண்டுகள் இடுப்பில் சுமந்து, ஆயுள் முழுக்க மனதில் சுமக்கும் அம்மாவை நேசிக்க வேண்டும்.

- அப்பாவே இரண்டாம் அதிசயம். தன் குழந்தைகளின் முகத்தில் புன்னகையைப் பார்ப்பதற்காக எப்படிப்பட்ட கஷ்டத்தையும் தாங்கிக்கொள்ளும் ஜீவன். குழந்தைகள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக, தனது சந்தோஷங்களைத் தியாகம் செய்து வாழ்க்கை முழுக்க உழைப்பவர் அப்பா.

- ஒவ்வொருவருக்கும் உடன்பிறந்தவர்களே மூன்றாவது அதிசயம். பகிர்ந்துகொள்வதையும் பாசம் காட்டுவதையும் கற்றுத் தரும் முதல் மனிதர்கள் அவர்களே! சகோதரிகள் வயது வித்தியாசத்தைத் தாண்டி அடுத்த அம்மாவாக மாறிவிடுகிறார்கள். சகோதரர்கள் தங்கள் அன்பை வெளிக்காட்டுவதில்லை. ஆனால், உலகிலேயே உங்களை அதிகம் நேசிக்கும் மனிதராக அவர்கள் இருப்பார்கள்.

- நண்பர்களே நான்காம் அதிசயம். நல்ல நண்பர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். எல்லா நேரங்களிலும் அவர்களைப் பார்க்க முடியாது. ஆனால், 'எப்போதும் நம்முடனே இவர்கள் இருக்கிறார்கள்' என்பதை உணர முடியும். கருத்து வேறுபாடுகளைத் தாண்டி மற்றவர்களை நேசிக்க முடியும் என்பதைக் கற்றுத் தருபவர்கள் நண்பர்கள்தான்.

- வாழ்க்கைத்துணையே நம் வாழ்வில் வரும்

## உணர்ந்து கற்பது வரம்!

ஆசிரியர் தன் வகுப்பிலிருக்கும் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தார். முதல் குழுவினரிடம், ''பானை செய்வது எப்படி, அதன் வடிவமைப்பு, அதற்கான திட்டமிடல் என்று எல்லாவற்றையும் புத்தகங்களில் படித்து வையுங்கள். கச்சிதமான பானையை உருவாக்குவது எப்படி என்றும் படியுங்கள். அதன்பின் ஒவ்வொருவரும் ஒரு அழகிய பானையைச் செய்யுங்கள். அதுவே உங்களுக்கான தேர்வு'' என்றார்.

இரண்டாவது குழுவினரை அழைத்து, ''நீங்கள் களிமண்ணைப் பிசைந்து பானைகள் செய்து பழகுங்கள். செய்யச் செய்ய உங்களுக்கு நேர்த்தி

ஐந்தாவது அதிசயம். உலகமே எதிர்த்தாலும், துணிச்சலாக நம்முடன் இணைந்து போராடும் ஒரே ஜீவன் வாழ்க்கைத்துணையே! அடுத்தவர்களுக்காக விட்டுக்கொடுப்பது சுகம் என்பதை நம்மை உணர வைப்பது இவர்தான். அடுத்தவர்களின் குறைகளை நோக்காமல், நிறைகளை மட்டுமே பார்க்கும் தன்மை நமக்குள் வருவது இவரால்தான்.

● ஒவ்வொருவருக்கும் அவர்களின் குழந்தைகளே ஆறாவது அதிசயம். சுயநலமற்ற அன்பு என்றால் என்ன என்பதைப் பலரும் குழந்தைகள் பிறந்தபிறகே உணர்கிறார்கள். 'நம் நலனைவிட மற்றவர் நலமே முக்கியம்' என்ற எண்ணம் நம் மனதில் உதிக்கக் காரணமாக இருப்பவர்கள். பிள்ளைக்கோ பெண்ணுக்கோ விட்டுக் கொடுக்காத, தியாகம் செய்யாத அப்பாவோ, அம்மாவோ உலகிலேயே இல்லையே!

● வாழ்க்கையில் ஏழாவது அதிசயம், ஒருவருக்கு வம்சம் தழைக்க வரும் பேரன், பேத்திகள்தான். நிறை வாழ்வு வாழ்ந்து முடித்து, 'இனி என்ன இருக்கிறது' என்ற விரக்தியான மனநிலையை அடைவார்கள் பல முதியோர்கள். அந்த நேரத்தில், 'இவர்களுக்காக நாம் நீண்ட ஆயுள் வாழ வேண்டும்' என்ற எண்ணத்தை மனதில் விதைப்பவர்கள் இந்தக் குட்டி அதிசயங்கள். திரும்பவும் வாழ்க்கைச் சக்கரம் உருண்டோடக் காரணமாக ஆகிறார்கள். முதிய வயதில் பலரும் குழந்தையாக மாறுவது பேரன், பேத்திகளால்தான்!

ஒவ்வொருவருக்கும் குடும்பமும் உறவுகளும் நட்புவட்டமுமே அதிசயங்கள்தான். நாம் எப்படி அதிசயத்தை வெளியில் ஏதேதோ கட்டங்களில் தேடுகிறோமோ, அதுபோல் மகிழ்ச்சியையும் நம் உள்ளே வைத்துக் கொண்டு வெளியில் தேடுகிறோம். முழுமையான அன்பு சூழ வாழ்வதே அதிசயத்துக்கு எல்லாம் அதிசயம்.

பெற்றோர்கள் நம்முடன் இருக்கும்போது, அவர்களுக்காக நேரம் செலவிட வேண்டும். குடும்பத்துக்காக பரபரப்பாக வாழ்ந்துமுடித்து ஒரு கட்டத்தில் நிமிர்ந்து பார்க்கும்போது, அவர்கள் இல்லாமல் போயிருப்பார்கள். குழந்தைகளுடனும் நேரம் செலவிடுங்கள். வளர்ந்து பெரிதாகி பொறுப்புகள் கூடும்போது, அவர்களுக்கு நம்முடன் செலவிட நேரம் இல்லாமல் போய்விடும்.

உணர்ந்து வாழ்ந்தால் போதும் உலகின் ஏழு அதிசயங்கள் வேறெங்கும் இல்லை. தினம் தினம் நம்முடனேயே இருக்கும். ●

வருகிறதா என்று பார்ப்போம். கடைசியில், ஒவ்வொருவரும் செய்ததில் அழகிய பானை ஒன்றை எடுத்துவாருங்கள். அதுவே உங்களுக்குத் தேர்வு'' என்றார்.

அன்றே முதல் குழு புத்தகங்கள் படித்து, பானை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டது. நீண்ட நாட்கள் ஆராய்ச்சி செய்து ஒவ்வொருவரும் ஒரு பானை செய்தனர்.

இரண்டாவது குழு களிமண்ணைப் பிசைந்து பிசைந்து பானை செய்து பழகியது. கைகள் வலித்தன, உடல் முழுக்க அழுக்கானது. ஆரம்பத்தில் தடுமாறினாலும், சீக்கிரமே கற்றுக்கொண்டனர். சிறிதாகவும் பெரிதாகவும் நிறைய பானைகள் செய்தனர்.

கடைசியில் தேர்வு நடந்தது. படித்து, ஆராய்ச்சி செய்து பானைகளை உருவாக்கிய முதல் குழுவைவிட, செய்து பழகிய இரண்டாவது குழுவே அழகிய பானைகளுடன் வந்திருந்தது. வாழ்க்கையில் பழகி, உணர்ந்து கற்பதே வரம்!


வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 5 இதழ் 9
பிப்ரவரி 2021

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்
**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்
**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்
**வள்ளி**

வடிவமைப்பு
**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# ட்விட்டர் வரம்

**@raajiangel**



சிலர் உங்கள் வாழ்க்கையில் வரமாக வருவார்கள். சிலர் பாடமாக வருவார்கள். வரத்தைப் போலவே பாடத்தையும் ஏற்றுக்கொண்டால் வாழ்க்கை எளிதாகும்.

**@THARZIKA**

தேவைகள் முடிந்தபின் விலகும் உறவுகளை விட, 'நீ மட்டுமே என் தேவை' என்று பழகும் உறவுகள் வரம்.

**@Murugan49569795**

மறதி, பல சமயங்களில் இறைவன் நமக்களித்த வரம்

**@azeemashique**



வாழ்க்கை எனும் பயணத்தில் சில உறவுகள்தான் நிழல் தரும் மரம். அப்படி உறவுகள் அமைவதெல்லாம் நமக்கு வரம்!

**@THARZIKA**

யாருக்கும் பாரம் இல்லாமல் இருப்பதே பெரும் வரம்... அது நிம்மதியும் கூட!

**@Harishma_**

கடவுள் கொடுத்த வரம் இல்லை... கடவுளே வரமாகக் கிடைத்தவர் தந்தை!

**@itzramguru**



எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சில நேரங்களில் சில உறவுகள் கண்முன் வரமாக வந்து நிற்பதுதான் வாழ்வின் சுவாரஸ்யம்!

**@Prakash93897987**

பிள்ளை வரம் கேட்டு கோயில் கோயிலாக ஏறி இறங்கும் பலருக்குத் தெரிவதே இல்லை, அம்மா வரம் கேட்டு அனாதை இல்லத்தில் காத்திருக்கும் குழந்தைகளின் ஏக்கம்.

**@leebanon**

எல்லோரும் கடவுளிடம் வரம் கேட்டு நிற்க, கடவுளோ குழந்தைகளிடம் வரம் கேட்டு நிற்கிறார்!

**@9thchoice**



கிடைத்திருப்பது வரமென உன்னால் உணரமுடியாவிட்டால் அது நிச்சயம் உன்னுடையதில்லை. நீ மற்றொருவரின் வரத்தை தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறாய்.

**@Firdaus_Tweetz**



குழந்தையாக வாழ்வது வரம்... அம்மாவோடு இருக்கும் நேரம்..!

**@Gowshhh**

சில விஷயங்களைச் சொன்னாலும் புரிந்துகொள்ள மறுப்பவர்களுக்கு மத்தியில்... சொல்லாமலே புரிந்துகொள்ளும் உறவுகள் கிடைப்பதெல்லாம் வரம்!

**@KowsalyaKumar10**

கணவனின் வருமானத்திற்கு ஏற்ப தன்னுடைய தேவைகளைச் சுருக்கிக்கொள்ளும் பெண் மனைவியாக அமைதல் வரம்!

**@umn_offl**

பெண்ணினம் மட்டுமே வாங்கிய வரம், 'தாய்மை'.



**@TN72DuskyKundan**

துணையில்லா வாழ்க்கை வரம், 'இளமையில்'; துணையில்லா வாழ்க்கை சாபம், 'முதுமையில்'!

**@SholinghurRavi**

ஒருவரின் வெற்றிகளையும், வலிகளையும் அவருடன் சேர்ந்து சுமப்பது அவரின் குடும்பம் ஆகும். எந்த நிலை வந்தாலும் உறுதுணையாக இருக்கும் குடும்பம், ஒவ்வொருவருக்கும் கிடைத்த வரம்!

**@MahadevanTwits**



பணம், அழகு, படிப்பு, திறமை காரணமாக ஒருபோதும் பிரிந்து போகாத நண்பர்களைப் பெறுவது வரம்.

# ட்விட்டர் வரம்



**@THARZIKA**



மனைவியை தாய் போலப் பார்த்துக்கொள்கிற கணவன் வரம், அப்படிப்பட்ட ஆண்கள் பேரழகு.


**@sangeethakamar5**

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழக் கற்றுக்கொண்டால், வாழ்க்கையில் அனைத்தும் வரம்!

**@TN72DuskyKundan**

நாம் சோகத்தில் இருக்கும்பொழுது, அவர்களின் சுகம் பாராது நம் சோகத்தைப் பங்குபோடும் நண்பர்கள்... நமக்குக் கிடைத்த வரம்.

**@srivatsparam**



எத்தனை வயதானால் என்ன? ‘அம்மா பிள்ளை தானே நீ’ என்றால், ஒடிவந்து கழுத்தைக் கட்டிக்கொள்ளும் மகன்... தாய்மையின் வரம்!

**@LonelyTwitz**

ஒவ்வொரு கணப்பொழுதும் ரசிக்க வல்ல மனமிருந்தாலே போதும்... அதுவே மாபெரும் வரம்!

**@ponkulanthai**



குழந்தை வரம் வேண்டி தவம் இருக்கின்றனர் பலர். வரமாகக் கிடைத்த குழந்தையை குப்பைத் தொட்டியிலிடுகின்றனர் சிலர்!

**@Sabapat06852198**

எல்லா சாமிகளை விடவும் ‘ஆமாம் சாமி’ நிறைய வரம் தருகிறது!


**@__BoyHasNoName**

தனிமை சில நேரங்களில் வரம்; பல நேரங்களில் சாபம்.

**@Feeling_Twitz**

அழுதபடியே உறங்கிப் போகும் குழந்தை போலவே மாறும் வரம் வேண்டும்.

**@kaviyapasakari**



சீரியஸா சண்டை போட்டுக்கிட்டு இருக்கும்போது, ‘ஏன்டா சண்டை போட்டோம்’னு நினைக்குற அளவுக்கு சிரிக்க வைக்குற உறவு கிடைக்கிறது வரம்.

**@sakthivasan3331**



நினைவு என்பது கடவுள் கொடுத்த சாபம், மறதி என்பது கடவுள் கொடுத்த வரம். இந்த இரண்டும் கலந்ததே வாழ்க்கை!

**@Sathiya1967**

நாம நினைச்சது படி வாழ்றது வரம்... நமக்கு விதிச்சது படி வாழ்றது சாபம்.

**@Uma_Offcl**

ஏதோ ஒன்றுக்கு ஆசைப்பட்டு, கடைசியில் வேறு ஏதோ ஒன்று வாழ்க்கையில் கிடைப்பதெல்லாம் நிச்சயம் சாபமாக இருக்காது, வரமாகத்தான் இருக்கும்!

**@anbarasu_Boss**





நம்மிடம் இருக்கும் சிலவற்றுக்காக இவ்வுலகில் எத்தனையோ பேர் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தாலே நம் வாழ்க்கையை வரமாக உணர்வோம்!

**@Malarko65562105**

தூங்கும்போது அனைத்து கஷ்டங்களும் மறந்து போவதால், உறக்கம் என்பது கடவுள் கொடுத்த வரம். அனுபவியுங்கள் வரத்தை!

**@_niviii**



ஆறுதல், அன்பு இரண்டும் ஒருவரிடமே கிடைத்தால் அது வரம்!



# சின்னச்சின்ன வரங்கள்!

◆ எப்போதும் மகிழ்ச்சியை இழக்காமல் இருக்கும் தன் பாட்டியிடம் பேரன் கேட்டான், ''வெற்றி என்பது என்ன?'' பாட்டி நிதானமாகச் சொன்னார் ''வாழ்க்கையில் கடந்துவந்த பாதையை நினைக்கும்போது, அந்த நினைவுகளால் நம் முகத்தில் புன்னகை மலர வேண்டும்.

◆ வெள்ளம் வந்து வீடுகளை மூழ்கடித்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு முகாமில் தங்க வைக்கப்பட்டன. அவர்கள் ஒருநாள் முழுக்க சாப்பிடாமல் பசியுடன் இருப்பதாகக் கேள்விப்பட்டு ஒருவர் உணவு கொண்டு சென்றார். 10 பேருக்கான உணவுடன் அவர் சென்றால், அங்கே 20 பேர் இருந்தனர். உணவு கொண்டுசென்றவர் திகைத்தார். ஆனால், அங்கே இருந்தவர்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ''எல்லோரும் பகிர்ந்துகொண்டு அரை வயிறு சாப்பிடுவோம்'' என்றனர். அது மட்டுமில்லை ''நீங்களும் எங்களுடன் சாப்பிடுங்கள்'' என உணவு கொண்டு சென்றவரையும் அழைத்தனர். 'பகிர்தல்' என்பதை அன்று புரிந்துகொண்டார் அவர்.

◆ செல்லமாக வளர்த்த நாய்க்குட்டிக்கு அடிபட்டது. அதை மருத்துவரிடம் கொண்டு சென்றார் ஒருவர். நாய்க்கு வலிக்குமே என்ற தவிப்பில் அவருக்குக் கண்ணீர் வந்துவிட்டது. அதை கவனித்த நாய்க்குட்டி, தன் முகத்தால் அவர் கண்ணீரைத் துடைத்தது. அவரை செல்லமாக நக்கியது.

◆ காலில் அடிபட்டதால் ஊன்றுகோலில் தாங்கியபடி கல்லூரிக்கு வந்தான் ஒரு மாணவன். தன் புத்தகப்பையை சுமந்து வருவதே அவனுக்குக் கடினமாக இருந்தது. வீல்சேரில் வந்த மாற்றுத் திறனாளி மாணவன் அதை கவனித்தான். அவன் பையை வாங்கி தன் மடியில் வைத்துக்கொண்டான். இருவரும் கல்லூரி வளாகத்தில் நீண்ட தூரம் கடந்து வகுப்புக்கு வந்தனர். பையைக் கொடுத்துவிட்டு, ''என்னை மாதிரி இல்லை. உனக்கு சீக்கிரம் சரியாகிவிடும். நீ நன்றாக நடப்பாய்'' என ஆறுதல் சொல்லிவிட்டு நகர்ந்தான், மாற்றுத் திறனாளி மாணவன். பையை வாங்கியவன் திகைத்து நின்றான்.

◆ அப்பாவுக்கு திடீரென இதயக்கோளாறு. அவசரமாக ஆபரேஷன் செய்வதற்கு மருத்துவமனை கூட்டிச் சென்றார்கள். ஆபரேஷன் தியேட்டருக்கு அப்பாவைக் கூட்டிச் செல்வதற்கு முன்பாக அவர் கன்னங்களை வருடிக்கொடுத்து நெற்றியில் முத்தமிட்ட மகன், ''பயப்படாதீங்கப்பா! சின்ன ஆபரேஷன்தான். சரியாகிடும்'' என்றான். அப்பாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. ''அழாதீங்கப்பா'' என்றான் மகன். ''நான் பயத்துல அழலை! சந்தோஷத்துல அழறேன். குழந்தையா இருக்கும்போது முத்தம் கொடுத்தது. முப்பது வருஷம் கழிச்சு இப்போதான் முத்தம் கொடுக்கறே! அந்த சந்தோஷத்தோட உள்ளே போறேன். நல்லபடியா திரும்பி வருவேன்'' என்றார் அப்பா.

◆ 'இதெல்லாம் ஒரு வேலையா' என்று எப்போதும் புலம்பியபடி மருத்துவமனையில் வேலைக்கு வந்தான் ஓர் இளைஞன். மரணத்தின் வாசலில் இருக்கும் புற்றுநோயாளி பெண் ஒருவர், தன் குழந்தையின் விளையாட்டைப் பார்த்து மனம்விட்டு சிரிப்பதை கவனித்தான். அந்த நிமிடத்திலிருந்து அவன் தன் வேலையைப் பற்றி புகார் செய்வதில்லை. ●

# இருப்பதெல்லாம் வரம்!



'ஒவ்வொருவரின் வாழ்க்கையும் வரங்களால் நிறைந்தது. அவற்றின் மதிப்பு பலருக்குப் புரிவதில்லை' என்று ஒரு பொன்மொழி உண்டு. இதை உணரும் தருணம் ஒருவருக்கு வாய்த்தது.

ஒருநாள் அலுவலகம் செல்லும்போது வழியில் விபத்து. பெரிய பாதிப்பு இல்லை என்றாலும், கண் அருகே அடிபட்டுவிட்டது. ஒரு மணி நேரம் காத்திருந்து டாக்டரைப் பார்த்தார். கண்ணுக்கு மருந்து எழுதிக்கொடுத்தார் டாக்டர். ஏற்கனவே தன் வேலையை அவருக்குப் பிடிக்காது. 'இந்தக் கண்ணுடன் இன்று முழுக்க கம்ப்யூட்டரைப் பார்த்தபடி வேலை செய்ய வேண்டுமே' என்ற எரிச்சலுடன் மருந்துக்கடைக்கு வந்தார்.

மருந்துக்கடையில் இவருக்கு முன் ஆட்டோ டிரைவர் ஒருவர் மருந்து வாங்கிக்கொண்டிருந்தார். ''ரெண்டு மருந்தும் 200 ரூபாய் ஆகும்'' என கடைக்காரர் சொல்ல, ''என்கிட்ட 100 ரூபாய்தான் இருக்கு. ஒரு மருந்து மட்டும் கொடுங்க'' என்றார் ஆட்டோ டிரைவர். ''இதில் எந்த மருந்தையும் நிறுத்தக்கூடாது. ரெண்டையும் சாப்பிட்டாதான் பலன் கிடைக்கும். நீங்க வாங்கிட்டுப் போங்க, காசு நாளைக்குக் கொடுங்க'' என்றார் கடைக்காரர். ''நாளைக்கும் என்கிட்ட காசு வரும்னு நிச்சயம் இல்லை'' என தயங்கினார் ஆட்டோ டிரைவர். ''பரவாயில்லை! உங்ககிட்ட எப்போ காசு வருதோ, அப்போ வந்து கொடுங்க'' என்று மருந்தைக் கொடுத்தனுப்பினார் கடைக்காரர்.

கண்வலியுடன் இதையெல்லாம் கவனித்த மனிதர் கலங்கிவிட்டார். அந்த ஆட்டோ டிரைவருடன் ஒப்பிட்டு தன் நிலையை நினைத்துப் பார்த்தார். நமக்குச் செய்வதற்கு ஒரு வேலை இருக்கிறது. அந்த வேலையைச் செய்வதால் வருமானம் வருகிறது. உடல்நிலை சரியில்லை என்றாலும், என்னால் செலவு செய்துகொள்ள முடிகிறது. இருந்தும் இந்த வேலையை வெறுக்கிறோமே என தலைகுனிந்தார்.

நிழலின் அருமை வெயிலில் தெரியும்; வெளிச்சத்தின் மதிப்பு இருளில் புரியும். பலருக்கும் இப்படி உணரும் தருணங்கள் வாய்ப்பதில்லை. கால்களில் செருப்பு இல்லை என்பதற்காக அழுத ஒருவர், கால்களே இல்லாத மனிதரைப் பார்த்ததும் ஆறுதல் அடைந்தாராம். அப்படித்தான் வாழ்வின் வரங்கள் பலருக்குப் புரிகின்றன.

வசிக்க ஒரு வீடு இருந்தால், அதை வரமாகக் கருதுங்கள்; சொந்த வீடு இல்லாதவர்கள் நிறைய பேர் உண்டு. பசிக்கும்போது சாப்பிட முடிந்தால், நிறைவு கொள்ளுங்கள். நிறைய பேர் அதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். ஆரோக்கியமான உடல் இருந்தால், பெருமிதப்பட வேண்டும். நிறைய பேர் மாற்றுத் திறனாளிகளாகவும் நோயாளிகளாகவும் இருக்கிறார்கள். வருமானம் தரும் வேலை, தொழில் அல்லது வியாபாரம் இருந்தால் நிம்மதி அடையுங்கள். பலருக்கு இது வாய்க்கவில்லை. வீட்டில் சகல வசதிகளும் இருந்தால் சந்தோஷப்படுங்கள். இவற்றில் பல விஷயங்கள் பலருக்கு வாய்க்கவில்லை.

உங்கள்மீது அன்பு பொழியவும், துன்பங்களில் ஆறுதல் சொல்லவும், முயற்சிகளில் வழிகாட்டவும் அக்கறையான மனிதர்கள் சுற்றிலும் இருந்தால், இந்த வாழ்க்கையில் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீங்கள். உங்களுக்கு வரங்களாக வந்து கிடைத்த எல்லாவற்றுக்காகவும் தினம் தினம் நன்றி சொல்லுங்கள். ●

# நிம்மதியே



**ஊ**ரிலேயே மிக மோசமான சோம்பேறி என்று அவனைச் சொல்வார்கள். உடலை வளைத்து ஒரு வேலையும் செய்ய மாட்டான். குடும்பத்துக்குச் சொந்தமாக இருந்த ஆடு, மாடுகளைப் பராமரிப்பதும், நிலத்தில் விவசாய வேலைகளைப் பார்ப்பதும் அவன் மனைவிதான். மனைவி உழைப்பில் குடும்பம் நடக்க, இவன் நிம்மதியாக ஊர் சுற்றினான். தூங்கி எழுந்ததும் குளித்துவிட்டு, ஊரின் மையமாக இருக்கும் மைதானத்துக்கு வருவான். அங்கிருக்கும் ஆலமரத்தின் அடியில் படுத்துக்கொள்வான். அந்த வழியே வருவோர், போவோரிடம் அரட்டை அடிப்பான். யாரும் இல்லாவிட்டால் தூங்குவான். அப்படியே பொழுது போய்விடும்.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு துறவி வந்தார். இவன் தூங்கும் அதே ஆலமரத்தின் அடியில் இன்னொரு பக்கத்தில் அவர் தங்கினார். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என மக்கள் பேசிக்கொண்டார்கள். பலரும் அவரிடம் போய் ஆலோசனை கேட்டார்கள். 'கூட்டமாக இருக்கிறதே' என்று இவன் அந்தப் பக்கம் போகவே இல்லை.

ஒருநாள் மதியம் அந்தத் துறவி கண்களை மூடி தியானம் செய்தபடி இருந்தார். அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என ஊர் மக்கள் போய்விட்டனர். ஊரே அமைதியாக இருந்தது. அப்போது துறவியைக் கொத்துவதற்காக ஒரு விஷப்பாம்பு நெருங்கியதை இவன் கவனித்துவிட்டான். உடனே ஓடிச்சென்று ஒரு தடியை எடுத்து அதை அடித்துக் கொன்றான்.

சத்தம் கேட்டு துறவி கண் விழித்தார். தன்னை அவன் காப்பாற்றியதை அறிந்ததும், நன்றி சொல்லி ஆசீர்வாதம் செய்தார். ''என் சக்தியைப் பயன்படுத்தி உனக்கு ஒரு வரம் தருகிறேன். என்ன வரம் வேண்டும்? கேள்!'' என்றார். ''எனக்கு வேலை செய்வது பிடிக்காது. எந்த சிரமமும் இல்லாமல் சீக்கிரமே பணக்காரன் ஆக வேண்டும். அதற்கு ஏதாவது வரம் கொடுங்கள்'' என்றான் அவன்.

''சரி, வரம் தருகிறேன்! இன்று முதல் ஒவ்வொரு இரவிலும் தூங்கும்போது உனக்கு ஒரு கனவு வரும். யாரோ ஒருவரின் பிரச்னை அதில் உனக்குத் தெரியும். அதற்கான தீர்வு என்ன என்பதும் அதிலேயே தெரியும். நீ அதைச் செய்து அவர்களைக் காப்பாற்றினால், உனக்கு நிறைய பரிசு கிடைக்கும். அதை வைத்து பெரிய

# நிறைவான வரம்!

பணக்காரன் ஆகிவிடலாம்'' என்று வரம் கொடுத்தார் துறவி.

துறவிக்கு நன்றி சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தான் அவன். நடந்ததை மனைவியிடம் சொன்னான். மனைவிக்கு இது பிடிக்கவில்லை. ''இந்த வரம் ஏதாவது விபரீதத்தில் முடியும். குறுக்கு வழிகள் எப்போதும் வேண்டாம். நம்மிடம் இருக்கும் நிலத்தில் நீங்கள் உழைத்தாலே, நாம் பணக்காரர்கள் ஆகிவிட முடியும். துறவியிடம் உடனே போய், இந்த வரம் வேண்டாம் என்று சொல்லுங்கள்'' என்றாள்.

ஆனால், அவன் கேட்கவில்லை. ''என்னை எப்போதும் திட்டுவாயே! இப்போது பார் இந்த இரவு முதல் எனக்கு நல்ல நேரம் ஆரம்பம்'' என்றபடி தூங்கப் போனான்.

அன்று இரவு அவனுக்கு ஒரு விபரீதமான கனவு வந்தது. நாட்டின் தலைநகரில் இருக்கும் அரண்மனைக் கருவூலத்தில் ரகசியமாக நுழைகிறார் அமைச்சர் ஒருவர். கருவூலத்தில் இருக்கும் விலைமதிப்புள்ள நகைகள் பலவற்றை ஒரு மூட்டையில் கட்டி எடுத்துச் செல்கிறார். வேகமாக தன் வீட்டை அடையும் அந்த அமைச்சர், வீட்டுக்குள் இருக்கும் ஓர் அறையில் ரகசியமாக அமைந்துள்ள சுரங்கப்பாதையில் அதை எடுத்துப்போய் வைக்கிறார். கனவு முடிந்ததும் அவன் திடுக்கிட்டு எழுந்துவிடுகிறான்.

கனவில் கண்ட காட்சிகள் அவனுக்குத் தெளிவாக நினைவுக்கு வருகின்றன. உடனே தலைநகருக்குப் புறப்பட்டான். அவன் போனபோது அரண்மனை பரபரப்பாக இருந்தது. முன்பின் தெரியாத இவனை, காவலர்கள் அரண்மனைக்குள் அனுமதிக்க மறுத்தார்கள். ''கருவூலத்தில் காணாமல் போன நகைகள் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்'' என்று அவன் சொன்னான். உடனே அனுமதி கிடைத்தது.

அரண்மனைக்குள் சென்று மன்னனை வணங்கினான் அவன். மன்னன் அருகிலேயே நகை திருடிய அந்த அமைச்சரும் இருந்தார். மன்னன் இவனைப் பார்த்துவிட்டு, ''நேற்று இரவுதான் நகைகள் காணாமல் போயின. வீரர்கள் யாரோ எடுத்திருக்கலாம் என அமைச்சர் சொல்கிறார். அதைத்தான் விசாரிக்கிறேன். சொல், உனக்கு யார்மேல் சந்தேகம்?'' என்று கேட்டான்.

''எடுத்ததே இந்த அமைச்சர்தான் மன்னா'' என்றான் அவன். மன்னனுக்கு கடும் கோபம் வந்துவிட்டது. ''இந்த நாட்டிலேயே நான் அதிகம் நம்புவது அவரைத்தான். அவர்மீதே திருட்டுப் பழி சுமத்துகிறாயா? உன் தலையை வெட்டிவிடுவேன்'' என்று சீறினான். அவன் கலங்கவில்லை. ''இந்த அமைச்சர் வீட்டுக்கு வாருங்கள் மன்னா! அங்கே இருக்கும் நகைகளை எடுத்துத் தருகிறேன்' என்றான். மன்னன் புறப்பட்டான். கனவில் பார்த்தபடி, அமைச்சர் வீட்டில் இருக்கும் ரகசிய அறையிலிருந்து நகைகள் அனைத்தையும் எடுத்துக்கொடுத்தான் இவன். உடனே அமைச்சரை சிறையில் அடைத்த மன்னன், இவனுக்கு ஏராளமான பரிசுகளைக் கொடுத்து அனுப்பினான். வீட்டுக்கு வந்து மனைவியிடம் எல்லாவற்றையும் கொடுத்த அவன், நல்ல விருந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கினான்.

அன்று இரவு கனவில், ஒரு வியாபாரியின் மகள் நோயில் படுத்திருக்கிறாள். யாராலும் அவளை குணப்படுத்த முடியவில்லை. அவளுக்கு நிவாரணம் தரும் மூலிகை, அந்தத் தோட்டத்திலேயே இருப்பது அவனுக்குக் கனவில் தெரிகிறது. விடிந்ததும் அங்கு போய், அந்த மூலிகையைக் கொடுத்தான். பல ஆண்டுகளாக படுக்கையில் கிடந்த பெண், உடனே எழுந்து நடந்தாள். வியாபாரி வியந்து போய், மூட்டை மூட்டையாய் பரிசுகள் கொடுத்தார்.

இப்படியே தினம் தினம் கனவுகள் ஆச்சர்யங்கள் பரிசுகள். விரைவில் ஊரிலேயே அவன் பெரிய பணக்காரன் ஆகிவிட்டான். ஆனால், இந்தக் கனவுகளால் அவனால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. சாப்பிட முடியவில்லை. எதுவும் செய்ய முடியவில்லை. தூக்கத்தை நினைத்தாலே அவனுக்கு பயம் வந்தது. உடல் மெலிந்து படுத்த படுக்கை ஆகிவிட்டான்.

விஷயம் கேள்விப்பட்டு துறவி அவனைப் பார்க்க வந்தார். ''அந்த வரம் எனக்கு வேண்டாம் சுவாமி! நிம்மதியே மிகப்பெரிய வரம் என்று புரிந்துகொண்டேன். என்னைப் பழைய மனிதன் ஆக்குங்கள்'' என்று கெஞ்சினான் அவன். ''சரி, இனி கனவுகள் வராது'' என்றார் துறவி.

அடுத்த நாள் முதல் அவன் குறுக்குவழிகளை மறந்து, கடுமையாக உழைக்க ஆரம்பித்தான். ●

மதிப்பிற்குரியவர்களுக்கு... RAMRAJ காட்டன் வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421–4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.


**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை


(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


For the Winners
RAMRAJ
BANIANS
BRIEFS • TRUNKS
LEADER
IN VEST
WEAR
www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2019-21. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-2-2021. Posted at Tirupur BPC on 5th of every month.

